உ

கடவுள்துணை.

செந்தமிழ்.

தொகுதி உக.] ருதிரோற்காரி ஹூ-புரட்டாசி-மீ [பகுதி கக.

Vol. XXI. September-October-1923. No. 11.

யவனபுரத்துக் கலைச்செல்வம்.

(ககூஉ-ம்பக்கத் தொடர்ச்சி)

17. இனி, யவனபுரத்துநாகரிகவளர்ச்சியை ஆராய்வா னெடுத்துக்கொண்டாம். இந்நாடு அழகு, அன்பு, ஞானம், கவித்துவம் என்னும் இவற்றிற்கு உறைவிடமாய் மேலைநாடனைத்தும் உய்யுமாறு அறிவுச்சுடர்பரப்பிநின்றது என முன்னமே கூறினும். ஹோமர் என்னும் கவிச்சக்கரவர்த்தி பிறந்த நாடிது ; சாக்கிரட்டீஸ், பிளேற்றோ, அறிஸ்ரோட்டில் என்னும் தத்துவஞானிகளைத் தோற்றுவித்த தாய்நாடிது ; கண்கவர்வனப்பினையுடைய ஆடவரையும் பெண்மக்களையும் அளித்த அழகுவாய்ந்த நாடிது. அரசியல்மரபும், அறநெறிமரபும், பொருள்வினைமரபும், கலைதெரிமரபும் சிறந்துவிளங்கிய நாடிதுவாதலின் இதன் பெருமையை ஆயிரம் அறிஞர் ஆயிரம் எழுதுகோல்கொண்டு எழுதுவாரெனினும் நிறைவுறக்கூறுரென்பது புனைந்துரையாகாது. அங்ஙனமாதலின், மிகச்சுருங்கிய இவ்வாராய்ச்சியில் இப்பரந்தபொருளை யாங்ஙனம் நடாத்துவோமெனின், பலதுறைப்பட்ட பொருண்மீதும் சிலச்சிலகூறிக் கலைச்செல்வமாகிய ஒருதுறைப்பொருளை விரிவுறக்கூறி ஒருவாறு முடிப்பாமென்பது.

யவனபுரவாசிகள் யாண்டிருந்து யவனபுரத்துக்கு வந்தனர், இவரோடு ஒத்தகுலத்தினராவார் யாவருளர், தமிழரும் பாதகண்டவாசிகளும் ஆகிய எமக்கும் இவர்க்கும் இயைந்த தொடர்புதான் என்னை, என்னும் இவை முதற்கண் ஆராயற்பாலன. கலி 2774-ம் ஆண்டில் அலக்சாண்டர் என்னும் யவனபுரத்துச் சக்கரவர்த்தி சிந்துநதிதீரத்தைநோக்கிச் சைந்யங்களோடுவந்து பாதகண்டத்தின் ஒருபாகத்தில் வெற்றிக்கொடி நாட்டினுரெனவும், அதற்கு இருபத்திரண்டு ஆண்டுகளுக்குப் பின் சந்திரகுப்தன் என்னும் பெயர்பூண்ட பாதகண்டத்துச் சக்கரவர்த்தி யவனசேனைகளை வென்று வாகைமாலைசூடிச் சார்வபௌமனுக அரசுபுரிந்தன னெனவும், இவன் யவனபுரத்து அரசிளங்குமரி யொருத்தியை மணந்தானெனவும், இவனது சமஸ்தானத்திற் சிலகாலம் வதிந்த மெகஸ்தினீஸ் என்னும் யவனபுரத்தறிஞர் பாதகண்டத்தின் இயல்பினை விரித்துரைக்கும் ஒருநூல்செய்திருக்கிருரெனவும், இம்மன்னனுக்குப்பின் அரசுபுரிந்த பிந்துசாரமன்னனது காலத்திலும் அதற்குப்பின் பட்டத்துக்குவந்த அசோக சக்கரவர்த்தியின்காலத்திலும் பாதகண்டத்துக்கும் யவனபுரத்துக்கும் நெருங்கியதொடர்பிருந்ததாமெனவும், பௌத்தமத சந்நியாசிகள் யவனபுரத்துக்குச்சென்று மதபோதனை செய்தார்களெனவும், தாலேஸ், எம்பெடோக்கிளீஸ், அனெக்ஸாகோரஸ், டெமோகிறிற்றஸ், பைதாகோராஸ் என்னும் யவனபுரத்தறிஞர்கள் பாதகண்டத்துக்கு வந்திருத்தல்கூடுமெனவும், எம்பெடோக்கிளீஸினுடைய கொள்கை சாங்கியமதக்கொள்கையையும், சாக்கிரட்டீஸினுடைய ஞானம் வேதாந்தஞானத்தையும் நிகர்த்திருப்பதாமெனவும் பலநூல்வாயிலாக அறிகின்றோம்.

மன்னன் கரிகால்வளவனுடைய காலத்திலும் அதற்கு முன்னும் பின்னும் முசிரியினும், காவிரிப்பூம்பட்டினத்தினும் யவனவர்த்தகர் வந்து வதிந்திருந்தனரெனச் சிலப்பதிகாரம் ஆதியாய தமிழ்நூல்களானறிகின்றோம். அஃதன்றியும், யவனபுரவாசிகளது பூர்வநிலையம் ஆசியாக்கண்டத்திலேயே இருந்தது; அவரது சமயநெறி கலைமரபு ஆதியன நமது ஆரிய முன்னோரது ஒழுக்கவழக்கங்களை நிகர்த்திருந்தன. யவனபுரத்துமொழி வடமொழியோடு நெருங்கிய தொடர்புடையது. இவற்றானும் இன்னோரன்ன பிரகாரணங்களாலும் யவனபுரத்தார் ஆரிய

வகுப்பினரென்பதாக ஆராய்ச்சிவல்லபண்டிதர்கள் நிச்சயித்துச்சொல்லு கிறார்கள். கலி இரண்டாயிரம் அதாவது கிறிஸ்தவாப்தத்துக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலே யவனபுரத்தார் வடக்கிலுள்ள அயற்றேயங்களிலிருந்து வந்து யவனபுரத்திற் குடியேறினாரென்பதாக அறிகின்றோம். இவர் வருதற்குமுன்பு அந்நாட்டிலிருந்தோர் ஏஜியர் என்னும் ஜாதியார். உயர்ந்த நாகரிகமுடைய இச் சாதியாரும் கிரேத தீவத்தாரும் திராவிடவகுப்பினராமென ஐரோப்பியபண்டிதர்கள் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். பூர்வயவனர் அக்கேயர், டோரியர், அயேலியர், அயோனியர் எனப் பலவகுப்பினராயிருந்தனர். ஒன்றுசேர்ந்தபின்னர் ஹெல்லேனியர் என்னும் பொதுப்பெயர் இவர்க்கு உளதாயிற்று. இவர் உறைந்தநாடு ஹெல்லாஸ் என்னும் பெயரினைப்பெற்றது. யவனபுர நாகரிகத்துக்கு முற்பட்ட பாபிலோனிய, ஆசுரேய, பினீசிய, எகிப்திய, கிரேத, ஏஜிய நாகரிகங்கள் ஹெல்லேனிய நாகரிகத்துக்கு வழிகாட்டிகளாக நின்றன.

ஹோமர் என்னும் கவிச்சக்கரவர்த்தியியற்றிய வீரகாவியங்கள் இரண்டும் பலநூற்றாண்டுகளாக எழுதாமரபினவாகவிருந்தனவாமென அறிகின்றோம். நமது சுருதிகளும் அவ்வண்ணமேயிருந்தனவாகலின் அக்கரவிலக்கணம் தோற்றுதற்கு முன்னமே அருங்காவியங்கள் தோற்றுதல் கூடுமென்னும் உண்மை நிலைபேறுடையதாகின்றது. இத்தொடரிலே, தமிழெழுத்துவரலாற்றைப்பற்றி ஒருசிலகுறிப்புகள் கூறுதல் மற்றொன்றுவிரித்தலாமாயினும் தமிழாராய்ச்சியாளர்க்குப் பயன்றருவதாமாதலின் எழுதன்மேற்கொண்டாம்.

18. பழமைவாய்ந்த வடமொழி தென்மொழியிலக்கணநூல்கள் எழுத்துக்களின் வரிவடிவவிலக்கணத்தையுந் தருகின்றனவாதலின் அக்கரவிலக்கண மேற்பட்டகாலம் அவற்றுக்கு முற்பட்டகாலமாக விருத்தல்வேண்டும். வடமொழியிலக்கணநூல்களாகிய காலாப, சாந்திர, சாரஸ்வத, முக்தபோத, சுபத்ம, ஹேமச்சந்திர வியாகரணங்க ளனைத்தினுக்கும் முற்பட்டதாய்த் தனித்தலைமைசான்றுவிளங்குவது பாணினீயவியாகரணம். பாணினிமுனிவர்க்கு முற்பட்ட யாஸ்கமுனிவரர் சாகடாயனம், சாகல்யம், கார்க்கியம் என்னும் வியாகரணநூல்களை மேற்கோளாகக் காட்டினர்; இவையனைத்தினுக்கும் முற்பட்டது ஐந்திர

வியாகரணம். பாணினிமுனிவரர் தந்த சிறந்தநூல் தோன்றியபின்னர் அதற்குமுற்பட்ட நூல்கள் வழக்கொழிந்து வீழ்ந்தன. இக்காலத்தில் வழங்குஞ்சாகடாயனம்வேறு பூர்வசாகடாயனம் வேறு என்ப தமிழிலக்கண நூல்களாகிய நன்னூல், தொன்னூல், சின்னூல் எனப் பெயரிய பன்னூல்களுக்கும் முற்பட்டு ஒப்புயர்வின்றி விளங்குவது தொல்காப்பியம். தொல்காப்பியம் எழுந்தகாலத்து ஐந்திரவியாகரணம் வழக்கிலிருந்தமையானும்; தொல்காப்பியர் நூலியற்றியகாலம் வியாசபகவான் வேதங்களை வகுத்தகாலத்துக்கு முற்பட்டதாமென ஆசிரியர் நச்சினார்க்கினியாருரைத்தாராதலினானும் பிறகாரணங்களாலும் தொல்காப்பியமானது பாரதயுத்தகாலமெனச் சரித்திர ஆராய்ச்சியாளரால் நிச்சயித்துரைக்கப்பட்ட கலி 1600 (கி.மு. 1500) க்கு முற்பட்டதாதல்வேண்டும். பாணினீயம் கலி 2700 வரையிற் றோன்றியதென ஆராய்ச்சியாளர் கூறுவர். தொல்காப்பியத்துக்குமுற்பட்ட ஐந்திரம் சுருதிநூல்போல் எழுதாமரபினதாயிருந்ததோ எழுதப்பட்டிருந்ததோ, வரிவடிவ இலக்கணத்தைத் தந்ததோ, தராதொழிந்ததோ என்பன ஒருவாற்றானும் நிச்சயித்தல் கூடாத முடிபுகளாம். வடமொழியாளர் வரிவடிவெழுத்தைத் தமிழ்மொழியாளரிடமிருந்து பயின்றுகொண்டாரென்பது றைஸ்டேவிட்ஸ் முதலிய ஆங்கிலபண்டிதர்களுடைய சித்தாந்தமாகும். தேவநாகரலிபி பூர்வத்தில் எழுதப்பட்ட உருவத்தில் மேலிழுக்கப்பட்ட கோடின்றியிருந்ததெனவும், அவ்வுருவத்தில் அதற்கும் தென்னாட்டில்வழங்குகிற கிரந்தலிபிக்கும் ஒற்றுமையிருந்ததெனவும் அறிஞர் கூறுவர். கிரந்தலிபி பழந்தமிழெழுத்தைப் பின்பற்றியெழுந்தது. பழையசாசனங்களில் வழங்குகிற வட்டெழுத்துத் தொல்காப்பியர்காலத் தெழுத்தினின்றுந் திரிவுபட்டதாமாயினும் உள்ளவற்றுட் பழமையானதாதலின் அதனையே பழந்தமிழெழுத்தெனக் கொள்வாம். இப்பழந்தமிழெழுத்துக்கும் யவனபுர அக்ஷரத்துக்கும் உருவஒற்றுமையிருக்கிறது.

யவனபுரமொழியின் நெடுங்கணக்கு இருபத்துநான்கு எழுத்துக்களைக் கொண்டது; உயிரெழுத்து எழு, மெய்யெழுத்துப் பதினேழு; சந்திபக்கரங்கள் பலவுளவாயினும் அவை ஈரெழுத்துக்கூடிய வரிவடிவினவாதலின் தனியெழுத்தென ஆராய்தல்வேண்டா. மெய்யெழுத்துப் பதினேழனுள் தமிழ்மொழிக்கும் யவனபுரமொழிக்கும் ஒலியுருவத்தாற் பொதுவெழுத்தாவன ப, க, த, ல, ம, ந, ர, ச என்னும் எட்டுமாம்.

இருமொழிக்கும் பொதுவாகிய இவ்வெட்டுமெய்களும் ஒத்த வரிவடிவினவாகவிருக்கின்றன. உயிரெழுத்துக்களுள் ஏகார ஓகாரங்கள் ஒத்த வடிவின. எகர ஒகரங்கள் வேறுபட்ட வடிவின. யவனமொழி இகர உகரங்கள் பழந் தமிழ் யகர வகரங்களை நிகர்த்தன ; யவனபுரத்தார் யகர வகர ஒலியுருவை முறையே இகர உகரங்களாற் குறியீடு செய்வாராதலினால் இவையும் ஒப்புமையுடையனவாம். யவனமொழியில் ஆகார, ஈகார, ஊகார ஒலிவடிவங்கள் அவற்றோடு இனச்சார்புடைய குற்றெழுத்துக்களாற் குறியீடுசெய்யப்படுவன. எஞ்சிநின்ற ஒன்பதுமெய்களுள் ஒரு மூன்று ஒலிவடிவினானும் வரிவடிவினானும் ப, ந, வ, ஆகிய கிரந்தாக்ஷரங்களை நிகர்த்தன. மற்றொருமூன்று ஒலிவடிவத்திற் ப, க, ட என்பவற்றோடு ஸ சேர்ந்து எழுந்த ப்ஸ, க்ஸ, ட்ஸ என்பனவற்றை நிகர்த்தன. எஞ்சிநின்ற ஒருமூன்றும் ப, க, ட என்பவற்றுக்கு இனமாய் நலிந்த ஓசையுடையன. ஈற்றிற்காட்டிய ஆறுமெய்களும் எகர ஒகர உயிர்களும் பிற்காலத்தில் யவனமொழியிற் சேர்க்கப்பட்டனவாமென்று எண்ண இடமுண்டு. அங்ஙனமாதலின், யவனபுர நெடுங்கணக்குத் தமிழ்நெடுங்கணக்கோடு பூரணஒற்றுமையுடையதென்பது நிறுவப்படுகின்றது. இவ்விருமொழியின்வரிவடிவங்கள் ஒன்றினின் றொன்றெழுந்தனவாமோ, அன்றேல் இவற்றின்வேறாகிய மற்றொருமொழியின் வரிவடிவத்தினின்று எழுந்தனவாமோ என்பதனை மேலாராய்வாம்.

இனி வடமொழித் தேவநாகரலிபியில் க, ச, ட, ப, ல, ம, ந, ர எனநின்ற எட்டுமெய்களைக் குறிக்கின்ற வரிவடிவெழுத்துக்களை மேல்கோடும் கீழ்நோக்கியிழுத்த நேர்கோடும் தவிர்த்து எழுதுங்காற் பெறப்படும் உருவம் பழந்தமிழுருவத்தை நிகர்த்தது. இவ்வெட்டுமெய்களும் தமிழ்மொழிக்கும் யவனபுரமொழிக்கும் பொதுவாகிய மெய்யெழுத்துக்களாமென்பது இத்தொடர்பில் உளங்கொளற்பாலது. இனித் தேவநாகரலிபியில் ஒகாரம் அகரவுயிரோடு நேர்கோடு ஒன்றும் மேல்விசிறியிரண்டுஞ் சேர்ந்த வரிவடிவத்தையுடையதேயன்றிக் கிரந்த, யவன, தமிழ் மொழி ஓகாரத்தைப்போலத் தனக்கென் றொருசிறப்புருவ மில்லாதது. தேவநாகரலிபி யகர, வகர, மெய்களை மேல்கோடு நேர்கோடுதவிர்த் தெழுதப் பெறப்படும் உருவம் பழந்தமிழ் யகர வகரங்களை நிகர்த்தது. தேவநாகரலிபி, அகர, இகர, உகர, ஏகாரங்களை மேல்கோடு நேர்கோடு

தவிர்த்தெழுதப்பெறப்படும் வரிவடிவங்கள் பழந்தமிழ் அ, இ, உ, எ என்பனவற்றை நிகர்த்தன. இங்ஙனம்கண்ட ஒற்றுமை வேற்றுமைகளை உளங்கொண்டு யவனமொழி, தமிழ்மொழி வடமொழி என்னும் இம் மொழிகளின் வரிவடிவெழுத்துவரலாற்றை யாராய்வாம்.

யவனபுரத்தார் தாம் வரிவடிவெழுத்தைப் பினீசியரிடமிருந்து பயின்றுகொண்டதாக உரைக்கின்றனர். அங்ஙனம்பயின்றுகொண்ட காலம் கி. மு. ஏழாவது நூற்றாண்டு என்பர். பினீசியஎழுத்து எகிப்திய சித்திரவெழுத்தின் வழிவந்தது ; மிகப் பூர்வீகமானது. எகிப்திய சித்திரவெழுத்துப் பொருளை அதன் வடிவத்தினாற் குறிக்குநீர்மையதாதலிற் பிறமொழியினின்று தோன்றாதது. எகிப்திய அக்கரவிலக்கணத்தையறிந்த பினீசியர் தமதுமொழியை எழுதுவதற்காகிய ஒரு வரிவடிவெழுத்துமுறையை வகுத்துக்கொண்டகாலம் கலி ஆயிரம் (கி. மு 2100) வரையிலிருக்கலாம் என அறிஞர் அபிப்பிராயப்படுகின்றனர். தமிழ்வரிவடிவெழுத்துக்கும் யவனபுரவரிவடிவெழுத்துக்கும் உள்ள தொடர்பினை நோக்கும்போது தமிழரும் யவனபுரத்தாரும் பினீசியரிடமிருந்து எழுத்துமுறையைப் பயின்றுகொண்டார்களென்றெண்ணவேண்டியிருக்கிறது. சிலகாலத்துக்குப்பின் தமிழ்நாட்டார் வடமொழியை எழுதுவதற்குத் தமிழக்கரங்களைச் சிறிது திரிவுபடுத்தியும் புது அக்கரங்களை வகுத்தும்வருங்கால் யவனமொழியிலிருந்து எடுக்குந்தகையவாகவிருந்த ஖, ம, ய, என்னும் மூன்று எழுத்துக்களையும் எடுத்துக்கொண்டார்களென்பது பூர்வீக யவனவெழுத்துக்களுக்கும் பூர்வீகக் கிரந்த அக்ஷரங்களுக்கும் இடையேயமைந்த உருவவொற்றுமையாற் புலப்படுகின்றது. பரந்த விப்பொருளை நன்காராயின் இந்தியாவி லிக்காலத்தில்வழங்குகிற அக்ஷரமுறைகளனைத்தும், அராபியமுதலிய செமித்தியமொழியக்ஷரங்களும், யவனபுர ரோமபுர அக்ஷரங்களும், இவற்றின் வழித்தோன்றி இந்நாளில் மேற்றிசையில்வழங்குகிற ஆங்கிலேயமுதலிய அக்ஷரங்களும், ஆகிய அனைத்தும் பினீசிய அக்ஷரங்களின்வழிவந்தனவாமெனவும், பினீசியஅக்ஷரம் எகிப்தியஅக்ஷரமுறையினின்றுந் தோற்றியதாமெனவும் அறிவாம்.

19. இனி, யவனபுரத்து வீரகாவியங்களைப்பற்றி ஒருசிலகூறி அப்பாற் செல்வாம். ஹோமர் என்னும் மகாகவியியற்றிய இலியட்

(Iliad), ஒடிஸி, (Odyssey) என்னுங் காப்பியங்களிரண்டும் யவனபுரத்தாருக்கு நாற்பொருள்பயக்கும் நீர்மையவாகப் பின்னால் பலவற்றுக்கு முதனூலாக நிலைபெற்றிருந்தன. இந்நூலிரண்டினொடுங் கதையினாற் றொடர்புடையதும் ரோமாபுரியில் அகஸ்டஸ் மன்னனது அவைக்களத்திருந்த வேர்ஜில் என்னும் மஹாகவியினாலியற்றப்பட்டதுமாகிய "ஏனேயகாவிய"த்தைப்பற்றிச் செந்தமிழ் 14-ம் தொகுதி 8-ம் பகுதியில் ஒரு கட்டுரை எழுதியிருக்கின்றோம். அக்கட்டுரையில் இலியட், ஒடிசி என்னுங் காவியங்களின் கதைச்சுருக்கமுந் தரப்பட்டிருக்கிறது.

இக் காவியங்கள் ஒவ்வொன்றும் இருபத்துநான்கு காதைகளானமைந்தன. முப்பதுகாதைகளானமைந்த மணிமேகலைநூலின்செய்யுட்டொகை முப்பது அகவற்பாவானதுபோல இவ்விருகாப்பியங்களும் இருபத்துநான்கு இருபத்துநான்கு வீரப்பாக்களால் முடிந்தன. வீரப்பா பலவாய அடிகளால் நீண்டுநடக்கு நீர்மையது. இதன் யாப்பினை யாராயுமிடத்து அடியொன்றுக்கு ஆறுசீராய் முதலைந்துசீரும் குரு லகு லகு என நிற்க ஈற்றுச்சீர் குரு குரு என முடிவது எனக் காண்போம். ஒரோவொருசீர் இடையினுங் குரு குரு என நிற்பதுண்டு. வடமொழி யாப்பின்வழிவந்த செய்யுளினங்கள் தமிழில் வந்துநடப்பதுபோல யவனபுரமொழியின்வழிவந்த வீரப்பாவையும் தொல்லாசிரியருரைத்த கலிப்பாவகையினுளடக்கித் தமிழில் எழுதுவாம். குரு லகு லகு குரு லகு லகு குரு குரு என்பது பாதி அடியாகவும் இதனையிரட்டித்தது ஓரடியாகவும்கொள்ளுங்கால் யவனமொழி வீரப்பா வடி பலவகையினுள் ஒருவகை வந்தெய்தும். இலியட், ஒடிசி யென்னுங் காப்பியத்தினுட் சிறந்த சில பாகங்களை இவ் யாப்பினி லமைத்துத் தருவாம்.

(தொடரும்)

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
திருமயிலை, சென்னை.

பிரபோதசைதந்யர்.

நற்றுணை நாற்பது.

———:(o):———

நற்றுணை நாற்பது என்றது இவ்வுலகத்தார்க்கு நல்ல துணையாகிய விஷயங்களை நாற்பது (அகவற்)பாக்களால் விளக்குவதென்றவாறு. தீத் துணையினின்றும் விலக்கப்பட்டமை போதர 'நற்றுணை' எனப்பட்டது.

இந்நாற்பது உரையோடு தனிப்பனுவலாகப் பின்னர் வெளியிடப் பெறும். கடவுளுஞ் சான்றோரும் கூறியவற்றையெல்லாம் மறித்தழித்து வரும் இக்காலத்தார் கொள்கையை நினைக்குந்தோறும் அறிவும் அநுபவமும் உடையார் வருந்தாமலிரார் என்பது எனது நம்பிக்கை. பேரவா வென்பது பெரியதொரு வறுமையாகும் என்பதற்கிணங்க ஆற்றலில்லாத இக்காலத்தார் இருந்து வருகின்றனர் என்பது மெய்யுரையாகும். இவ்விருக்கையர் சான்றோர் கட்டுக்களையெல்லாம் அவிழ்த்துவிட்டுத் தம்மைமூட்டாளராக அமைத்துக் கொண்டு பேரிடர்புரிந்து பிதற்றி வருகின்றனர். அவர்பிதற்றை அறவே ஒழித்தற்குப் பெரிதும் நோக்கங்கொண்டுளேன். நோக்கத்தை நிறைவேற்றும் ஆற்றல் சிறிதும் இல்லேன். அணைகட்டமுயன்ற ஆற்றலில்லாத அணிலின் கதையொன்றுண்டெனல் எனது நெஞ்சத்திற்கு ஞாபகம் வருகின்றது.

இந்நூலைச் செந்தமிழில் வெளியிட்டுவருதற்கெண்ணி ஒருபாடலை முதற்கண் இதுபோது ஈண்டுத் தருகின்றேன். பகை, நண்பு, நொதுமல் என்னும் இவற்றின்பாற்பட்டு என்னும் எழுதிற்றிலேன். அறிஞர்கள் ஆதரித்து நல்லபிப்பிராயத்தை யறிவிப்பார்களாக. (ந. கி.)

தம்மொழி பயிற்றுந் தகையரை வெறுப்பவர்
வடமொழி பயிற்று தவரையும் வெறுக்குநர்
பிறர்மொழிப் பயிற்சி தம்மொழிக் கேடா
முறையு மறிகிலர் வாய்வந்த வுரைக்குந
ரீங்குள கொண்டுசெல் லியல்பினர் வெறுப்பவ
ரீங்குள விழையார் தம்மையும் வெறுக்குநர்
மறைநூல் பாடிப் பிறையின் வளர்த்தாங்
கிறைமை யெய்தின ரவரெனப் பொறாஅ
தவர்காப் பகற்றி யதனையு மேட்டிற்
படுத்துத் துயிலப் பண்ணினர் மன்ற
நூலும் பொருளு நிலனுமில் லவர்தாம்
வேத்தவை வினையின் மேயினர் மேவல்கண்
டதற்கு மாற்று ரவரொடு முரணுந
ரிரண்டொரு நூலையு மிருக்கவைத் திலாயச்
சிதலைக் கீந்துணச் செய்த
முதலைத் தமிழர் மாண்புனி நன்றே.

(தொடரும்).

உ

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(சஎகூ—ஆம் பக்கத் தொடர்ச்சி.)

124. புள்ளிக் குறியிட் டெனப் பல் மீன் பூத்த வானம் பொலி கங்குல்
நள்ளில் செறிந்த இருட் பிழம்பை நக்கி நிமிர்ந்த நிலாக் கற்றை,
கிள்ளைக் கிளவிக்(கு) என் ஆம் கொல் கீழ் பால் திசையின் மிசைவைத்த
வெள்ளிக் கும்பத்(து) இளம் கமுகின் பாளை போன்று விரிந்துளதால்.

இ-ள். புள்ளிகளாகிய அடையாளம் போட்டாற்போலப் பல நட்சத்திரங்கள் தோன்றப்பெற்ற ஆகாயத்தில் அர்த்தராத்திரியில் நெருங்கிய இருட்கூட்டத்தை உண்டு மேலோங்கிய நிலாத்திரள், கிளிமொழி (யாளாகிய சீதாபிராட்டி)க்கு யாதாமோ! (அந்த நிலாக் கதிர்த் தொகுதி,) கிழக்குத்திக்கில் தாபித்த வெள்ளிக்குடத்தில் (சொருகி வைத்த) இளங் கமுகம் பாளை (விரிந்து பரந்ததை) ஒத்துப் பரந்திருக்கின்றது.

"என்னுங்கொல் என்றது துன்பத்தைச் செய்யுமென்பது பட நின்றது. சந்திரனுக்கு வெள்ளிக்கும்பமும், நிலாக்கற்றைக்குக் கமுகம் பாளையும் உவமை." ஸ்ரீ இராமசாமி நாயுடு.

125. வண்ண மாலைக் கை பரப்பி உலகை வளைந்த இருள் எல்லாம்
உண்ண எண்ணித் தண்மதியத்(து) உதயத்(து) எழுந்த நிலாக்கற்றை,
விண்ணும் மண்ணும் திசை அனைத்தும் விழுங்கிக் கொண்ட விரிநல் நீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன்தன் புகழ்போல் எங்கும் பரந்துளதால்,

இ-ள். மாலைப்பொழுதாகிய கையைப் பரப்பி உலகத்தைச் சூழ்ந்து (தனக்குள் ஆக்கிக்) கொண்ட இருள் முழுவதையும் உண்டுவிடக் கருதிச் சந்திரோதய சமயத்திற் கிளர்ந்த நிலாச்கூட்டமானது, சடையப்பவள்ளலது—மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் (அவைகளைச்சூழ்ந்த) திசைகளெல்லாவற்றையும் விழுங்கிவிட்ட—கீர்த்திபோல எங்கும் பரவியது.

வண்ணம்--நிறம். வண்ணமாலை--செவ்வானச் செந்நிறமும் இருளின் கருநிறமும் உடையமாலை. தண் மதியம்—குளிர்ச்சியுடைய சந்திரன். பண்ணை—வயல் (சூழ்ந்த) வெண்ணெய்—திருவெண்ணெய்நல்லூர். விழுங் கிக்கொண்ட புகழ் எனக்கூட்டுக.

"சடையப்பமுதலியார்புகழ் எங்கும் பரந்ததுபோல நிலாக்கற்றை எங்கும் பரந்ததென்பது கருத்து" ஸ்ரீ இராமசாமிநாயுடு.

126. நீத்த மதனில் முளைத்(து) தெழுந்த நெடுவெண் திங்கள் எனும் தச்சன்,
மீத்தன் கரங்க ளவை பரப்பி, மிகுவெண் நிலவு ஆம் வெண் சுதையால்
காத்த கண்ணன் மணி உந்திக் கமல நாளத் திடைப் பண்டு
பூத்த அண்டம்' பழையதென்று, புதுக்கு வானும் போன்றுளதால்.}

இ-ள். கடலில் உதயமாகி மேலெழுந்த சந்திரனென்னும் தச்சனவன்; திருமால், (தனது) நாபிக்கமலநாளத்தினிடத்தே ஆதிகாலத்தில் உண்டாக்கிய உலகம் (ஆகிய மாளிகை) பழையதாய்ப்போயிற்றென்று (அதன்) மேலே தன் (கிரணக்) கைகளைப் பரப்பி நிலவாகிய சுண்ணும்புக்குழம்பினுல் (தீற்றிப்) புதுப்பித்தல்போன்று (அந்த நிலாக் கூட்டம்) உள்ளது.

நீத்தம் - வெள்ளம், இங்கே கடலைக்குறித்தது. நெடுவெண் திங்கள் - மிகுந்தவெண்மையுடைய சந்திரன். மீ - மேல். கரங்கள் - 1. கைகள்; 2. கிரணங்கள். அவை, பகுதிப்பொருள் விகுதி. சுதை - சுண்ணச் சாந்து - சுண்ணும்புக்குழம்பு. மணி உந்திக் கமல நாளம் - அழகுடைய கொப்பூழாகிய தாமரைத்தண்டு. பூத்த - உண்டாக்கிய. புதுக்கு வான் - புதுக்குதல். வருதல் ஏன், செய்தல் ஏன் என்ற பொருள்பட 'வருவானேன்' 'செய்வானேன்' என்பவை வருதல்போலப், புதுக்குதல் என்ற பொருளில் 'புதுக்குவான்' வந்தது. 'உளது'என்றபயனிலைக்கு எழுவாய் முந்திய பாட்டில் உள்ள 'நிலாக்கற்றை'.

127. நீங்கா மாயை அவர்தமக்கு நிறமே தோற்றுப் புறமே போய்
ஏங்காக் கிடக்கும் எறி கடற்கும் எனக்கும் கொடியை ஆனுயே!
ஓங்கா நின்ற இருளாய் வந்(து), உலகை விழுங்கி மேல்மேலும்
வீங்கா நின்ற கரு நெருப்பின் இடையே எழுந்த வெள் நெருப்பே!

இ - ள். பெருத்த இருளுருவாய் (ப் பரிணமித்து) வந்து உலகத்தை விழுங்கி (னாற்போல முழுதும் மூடிக் கவர்ந்து) வரவர அதிகமாக வளர்ந்துகொண்டிருந்த கருநெருப்பின்நடுவிலே உண்டாகிய வெண்ணெருப்பே! (எனக்கு) நீங்காத மயக்கத்தைச்செய்த அவருக்கு நிறத்திலே தோல்வியடைந்து தூரமாகப்போய் ஏங்கிக்கொண்டு கிடக்கும் கடற்கும் எனக்கும் கொடுமையுடையோனாகினாயே!

'மாயை அவர்', என்பது மாயையைச்செய்கின்ற அவர் என்றுபொருள்பட நின்றது, 'சங்காரமூர்த்தி' சங்காரத்தைச்செய்யும் மூர்த்தியென்று பொருள்பயத்தல்போல. ஏங்குதல் - 1. ஒலித்தல்; 2. ஏக்கமுறுதல். 'ஏங்கா (-ஏங்கி)க்கிடக்கும்' என்பதில் இவ்விருபொருளும் இனிது பொருந்தியிருக்கின்றன. எறிகடல் - (அலைகளை) வீசும் சமுத்திரம். கொடியை - கொடுமையுடையாய்.

சீதாபிராட்டி தம் விரகத்தையும் கடலின் நீரையும் பொங்கிப்பெருகச் செய்தலாற் சந்திரனைக் 'கொடியை' யென்றார். விரகிகளுக்கு வெப்பஞ் செய்தலால் இருளையும் நிலவையும் முறையே கருநெருப்பென்றும் வெண்ணெருப்பென்றும் உருவகித்தார். இயல்பிலே குளிர்ச்சியான இருளையும் நிலவையும் பொருத்தமாக நெருப்பென்றதும் அவை தம்முள் மாறுபடுதலைக்குறிக்கக் கருநெருப்பு வெண்ணெருப்பென்றதும் அருமையும் இனிமையும் ஆச்சரியமுமாக விருக்கின்றன.

வேறு.

128. "கொடியை அல்லை நீ யாரையும் கொல்கிலாய்,
மடி(வு)இல் இன் அமு தத்தொடும் வந்தனை
பிடியின் மெல் நடைப் பெண்ணொ(டு)என் றால், எனைச்
சுடுதி யோ! கடல் தோன்றிய திங்களே!"

இ - ள். "(குளிர்ந்த) கடலிலே தோன்றிய சந்திரனே! (எனக்குக் 'கொடியை ஆனாய்' என்றேன். அதுகிடக்க, பிறர் திறத்தில் நீ) கொடுமையுடையா யல்லை; யாரையும் கொல்லமாட்டாய்; (தன்னை உண்டார்) மாணத்தை நீக்கும் இனிய அமுதத்துடனும் மெல்லிய பெண்பாலான திருமகளுடனும் பிறந்தாய் என்று (உலகத்தார்) கூறுவது உண்மையானால், என்னைச் சுடுவாயோ!"

'சாவா மருந்து' சாதல் இல்லாமற் செய்யும் மருந்து எனவும் 'மூவா மருந்து' மூத்தல் இல்லாமற் செய்யும் மருந்து எனவும் வருதல்போல, 'மடிவில் அமுதம்' மடிதல் இல்லாமற் செய்யும் அமுதமென வந்தது. 'வடிவிலின் னமுதத்தொடும்' என்றும் பாடம். அமுதத்தொடும் பெண்ணொடு(ம்) வந்தனை என்றால் எனக் கூட்டுக. என்றால், என்று கூறுவது உண்மையானால் என்றபொருள்பட நின்றது, 'நீ யோக்கியனென்றால், கொண்டகடனைக் கொடுத்துவிடு' என்பதிற்போல. பிடியின் மெல்நடைப் பெண் - பெண்யானையின் நடைபோலும் மெல்லிய நடையையுடைய இலக்குமி. சுடுதியோ - சுடுவாயோ.

'சுடுதியோ' என்பதற்குச் சந்திரனே, நீ பிறந்த இடம் குளிர்ந்த கடல்; உன் கூடப் பிறந்தபொருள்களோ, இனிய அமுதமும் மெல்லிய பெண்ணும்; ஆதலால் உனக்குச் சுடுதல் இயல்பன்று; ஒருகால் சுட்டாலும் பெண்ணொடுபிறந்த நீ பெண்ணாகிய என்னைச் சுடலாமோ என்றும்: 'கொடியை அல்லை' என்பதற்கு மென்மைத்தன்மையுடைய பெண்ணுடன் பிறந்ததனால் இரக்கமுடையை; ஆதலால் கொடுமையுடையாயல்லை என்றும்: 'கொல்கிலாய்' என்பதற்குச் சாவை நீக்கும் அமுதத்தோடு பிறந்ததனால் உயிரைக் காப்பாற்றுவாய்; கொல்லமாட்டாய் என்றும் பொருள் விரித்துரைக்க.

'நீங்காமாயை' என்ற பாட்டுக்குமுன் 'சீதை' என்பதும் 'கொடியையல்லை' என்ற பாட்டுக்குப்பின் 'என்றாள்' என்பதும் வருவித்துப் பொருள் முடிவுசெய்க.

129. நீக்கம் இன்றி நிமிர்ந்த நிலாக் கதிர்
தாக்க வெந்து தளர்ந்து சரிந்தனள்:
சேக்கை ஆகி மலர்ந்த செந் தாமரைப்
பூக்கள் பட்ட(து)அப் பூவையும் பட்டனள்.

இ-ள். (மாலை சிறிது பொழுதிருந்து நீங்கியது; அதன் பின் வந்த இருளும் நெடுநேரம் நில்லாது கழிந்தது. அவற்றுக்குப் பின்பு தோன்றி, அவைகள்போலல்லாமல், அதிக நேரமாக) நீங்காததாய் (அடிவானத்திலிருந்து) மேல் எழுந்துகொண்டிருந்த சந்திரனது

கிரணங்கள் மேல்விழுதலால், சீதாபிராட்டி வெதும்பித் தளர்வடைந்து சாய்ந்திட்டார்: (அவருக்குப்) படுக்கையாகி (அவர்தேக வெம்மையால்) தாமரைமலர்கள் பட்டபாட்டை (நிலவு தம்மேல் விழுந்து தாக்குதலால்) அவர்பட்டார்.

சேக்கை—1. இருப்பிடம்; 2. படுக்கை. பூவை-பூவை (—நாகணவாய்ப் பறவை) மொழிபோலும் மொழிகளையுடைய பெண்—சீதை.

சீதாதேவி இலக்குமிதேவியாயிருந்தகாலத்தில், அவருக்கு இருப்பிடமாகி அதனால் மகிழ்ச்சியடைந்தனபோல மலர்ந்த செந்தாமரை மலர்கள் நிலவினாற் பட்ட பாட்டை அந்நிலவால் தாமும் பட்டாரென்றும் 'சேக்கையாகி..................பூவையும் பட்டனள்' என்பதற்குப் பொருள் கூறலாம். மேலே, பொழிப்புரையில், நிலவால் அதிகப்பட்ட விரகதாபத்தால் வெதுப்புண்ட சீதாதேவியின் தேக வெம்மையால் தாமரைப்பூக்கள் பட்டபாடென்றது, இப்பாட்டுக்கு முந்தியதும் இத்திரட்டிலே சேர்க்கப்படாததுமான பாட்டில் 'போது மொய்த்தம ளிப் புரண்டாளரோ' என்று கூறியிருப்பது பற்றிக் கூறப்பட்டது. போது மொய்த்(த)அமளி—பூக்கள் நெருங்கிய படுக்கை.

130. வாச மெல் கல வைக் களி வாரி, மேல்
பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினள்:
வீச வீச வெதும்பினள் மெல் முலை;
ஆசை நோய்க்கு மருந்தும் உண் டாம் கொலோ?

இ-ள். (தோழியர்) கலவைச் சந்தனக் குழம்பை அள்ளி (அள்ளி) மேலே பூசப் பூச (அக்குழம்பு) உலர்தலுற்று (அவர்) வெதும்பினார்: (அவர்கள் விசிறி கொண்டு) வீச வீச (அதிக) வெப்படைந்தார்: (அவர்கள் செய்த சைத்தியோபசாரம் ஒன்றும் பயன்படவில்லை: மற்ற நோய்களுக்கு மருந்திருத்தல் போல) ஆசை நோய்க்கும் மருந்துண்டோ?

கலவைக்களி—சந்தனத்துடன் வேறு பரிமளப்பொருள்கள் கலக்கப்பட்ட குழம்பு. வாரி—அள்ளி. புலர்ந்து—உலர்ந்து. மெல் முலை வெதும்பினள்—1. மென்மையான கொங்கைகள் (சந்தனம் பூசப்பட்டும் விசிறி

வீசப்பட்டும்) வெதுப்புண்டாள்; 2. மென்முலையுடையாள் (ஆகிய சீதை) வெப்பமடைந்தாள். சைத்தியோபசாரம்—சைத்தியம் (—குளிர்மை உண்டாம்படி செய்யும் உபசாரம்.

[மேற் கூறியவாறு சீதாதேவி வருந்திக்கொண்டிருந்தார். அவரைக் கன்னிகாமாடத்திலே கண்டு சென்ற விசுவாமித்திர ராம லக்குமணர்கள் சனகமன்னரைக்காண, அவர் அவர்களை வரவேற்று உபசரித்துச் சிறந்த மாளிகை யொன்றில் அமரச் செய்தனர். அங்கே கௌதம புத்திராகிய சதாநந்தமுனிவர் வந்தார். வந்தவரை இராமர்வணங்க அவர் அவருக்கு ஆசிகூறியபின்பு, விசுவாமித்திரரை நோக்கித் "தேவரீர் எழுந்தருளுவதற்கு இந்நகரம் செய்த புண்ணியம் யாதோ" என்று உபசாரவார்த்தை கூறினர்; அவரை நோக்கி விசுவாமித்திரர்,]

131. வடித்த மாதவ கேட்டி இவ் வள்ளல் தான்
இடித்த வெம் குரல் தாடகை யாக்கையும்
அடுத்(த)என் வேள்வியும் நின் அன்னை சாபமும்
முடித்(து)என் நெஞ்சத்(து) இடர் முடித் தானென்றான்.

இ-ள். இந்த வள்ளல் (இராமர்) இடி ஒத்த சத்தத்தையுடைய தாடகையின் தேகத்தையும் எனது யாகத்தையும் உம்முடைய தாயினது சாபத்தையும் முடிவுறச் செய்து (தாடகையின் தேகம் எனது யாகம் உமது தாயின் சாபம் ஆகிய மூன்றும் முடிவுறாதிருந்ததனால் நீடித்திருந்த) என் மனவருத்தத்தையும் முடிந்தொழியச் செய்தவர் என்றார்.

வடித்த—திருத்தமாகச் செய்த (புறநானூறு அரும்பத அகராதி). கேட்டி—கேட்பாய், இடித்த—இடிபோல் முழங்கிய (புறப் பொருள் வெண்பாமாலை அரும்பத அகராதி). அடுத்தென்—(தம்மை உதவி செய்யும்படி வேண்டி) அடுத்த (—அடைந்த) என்னுடைய. இதன் முந்தியபாட்டின் உரையிற் குறித்த 'மொய்த்த அமளி' 'மொய்த்தமளி' என வந்ததுபோல, 'அடுத்த என்' 'அடுத்தென்' என வந்தது. முடித்தல்—1. (யாக்கையை) அழித்தல்; 2. (வேள்வியை) நிறைவேற்றல்; 3. (சாபத்தைத்) தீர்த்தல்; 4. (நீடித்திருந்த இடரை) முடிவாயொழிந்துபோகச் செய்தல். இடர்—வருத்தம்.

முடித்தல் என்ற ஒரு வினைச்சொல்லைப் பல செயப்படுபொருள்களுக்குப் பொருந்தப் பலபொருள்படப் பிரயோகித்திருக்கும் சாதுரியம் பாராட்டத்தக்கது.

[மேற்கூறியவாறு விசுவாமித்திரர் கூறியபோது, சதாநந்தர், "உமது அருளைப்பெற்ற வீரர்க்குச் செய்தற்கரியது யாதுமில்லை" என்று சொல்லி, இராமரை நோக்கி "இந்த விசுவாமித்திர முனிசிரேட்டர் ஆதியில் அரசராயிருந்தார். ஒருநாள் இவர் வேட்டைக்குச் சென்றபோது, வசிட்டர் காமதேநுவைக்கொண்டு இவருக்கும் இவருடைய அளவிறந்த பரிசனங்களுக்கும் அதிசயமான விருந்து செய்வித்தார். இவர் அவரை அக் காமதேநுவைத் தமக்குக் கொடுக்கும்படி வேண்ட, அவர் மறுக்க, இவர் வலாற்காரத்தினால் அதைக் கவரமுயன்று போர்புரிவாராகி, விட்ட அத்திர சத்திரங்களொன்றும் காமதேநுவையாவது வசிட்டரையாவது ஒன்றும் செய்ய முடியாமை கண்டு, அரசரினும் தவசியர் வலியரென்று அரசை வெறுத்துத் துறந்து அளவற்ற காலம் அகோர தவஞ்செய்து பிரமசிருட்டிக்கு எதிர்ச் சிருட்டி செய்யவல்ல அபூர்வ தபோபலம் பெற்றவர். இப்படிப்பட்ட மகா புருடருடைய அருளைப்பெற்ற உமக்கு எதுதான் அரிது, யாதும் எளிதே" என்று கூறி இராமரை ஆசீர்வதித்து எல்லாரிடத்தும் விடைபெற்றுத் தம் மிருப்பிடம் சென்றனர்.]

132. முனியும் தம்பியும் போய் முறை யால் தமக் (கு)
இனிய பள்ளிகள் எய்திய பின், இருட்
கனியும் போல்பவன் கங்குலும் திங்களும்
தனியும் தானும் அத் தையலும் ஆயினன்.

இ-ள். விசுவாமித்திரரும் இலக்குமணரும் (அந்த மாளிகையில் தங்கள் பள்ளியறைகளுக்குச்) சென்று முறைப்படி (என்றும் போல இன்றும் இனிது தூங்கும்படி) தம் படுக்கைகளை அடைந்த பின்பு, இராமர் (அவ்வாறு படுக்கையை அடையாராய்) இரவும் சந்திரனும் தனிமையும் தானும் சீதாதேவியும் (கவர்ந்து கவல்விக்கப்பட்ட மனத்தினர்) ஆகினர்.

முறையால் - முறைமைப்படி - (என்றும் உள்ள) வழக்கப்படி. பள்ளி - படுக்கை, எய்திய - அடைந்த, இருள் கனிபோல்பவன் -

இருள் முதிர்ந்து கனிந்தது போன்றவன் - மிக இருண்ட நிறத்தினன்- இராமன். கங்குல் - இரவு. திங்கள் - சந்திரன். தனி - தனிமை. தையல் - பெண் - சீதை - சீதையின் ஞாபகமும் அவளுடைய உரு வெளித்தோற்றமும்.

'முனியும் தம்பியும் போய் முறையால் தமக் கினிய பள்ளிகள் எய்திய' என்றதனால், இராமர் படுக்கைக்கு என்றும் போல இன்று செல்லவில்லை யென்பதும் அவருக்குப் படுக்கை இனியதல்லாத தாயிற் றென்பதும் குறிப்பித்தார்.

இராமருக்கு இன்றளவும் பழகியவைகளாய் இன்பஞ் செய்வனவா யிருந்த இரவும் சந்திரனும் இன்று புதிய (குணமுடையன)வாய்த் துன்பஞ்செய்வனவாயினதற்கும், முன் சில சமயங்களில் தனித்திருக் கும்படிநேர்ந்தபோதிருந்தபடியில்லாமல் இப்போது தனிமை தன் தன்மை மாறிச் சகிக்கக்கூடாததா யிருப்பதற்கும், தாம் தம்மை இது வரை அறிந்தவாறின்றிவேறுபட்டுத் தமக்கே தாம்அந்நியமாய்வெறுப்பா யிருப்பதற்கும் காரணம் சீதாதேவியே என்பது விளங்கக் 'கங்குல் திங்கள் தனி தான்' என்பவைக ளெல்லாவற்றுக்கும் பின் இறுதியில் 'தையல்' என்றார்.

இராமபிரான், பள்ளிகொள்ளும் சமயத்துக்குமுன் துணையா யிருந்த விசுவாமித்திரர் முதலியோரது துணையில்லாமல், அந்தச் சமய முதல் விடியுமளவும் இயல்பாகத் துணையாக இருக்க வேண்டிய தூக்கத் துணையுமில்லால் இரவும் நிலவும் தனிமையும் தானும் சீதாதேவியைப் பற்றிய நினைவுமே துணையாக இராப்பொழுது முழுதும் வருந்திக் கழிப்பாராயினா ரென்பது கருத்து.

133. விண்ணின் நீங்கிய மின் உரு இம் முறை
பெண்ணின் நல் நலம் பெற்றதுண் டேகொலோ?
எண்ணின், ஈ(து,)அல(து,) என் (று)அறி யேன்; இரு
கண்ணின் உள்ளும் கருத்துள்ளும் காண்பனால்!.

இ-ள். "(கை கால் முதலிய அவயவப் பகுப்பில்லாத) மின்னுரு வம் (கணநேரத்தில் மறைந்தொழிவதல்லது நிலையானதாய்) இவ்வாறு (அவயவப் பகுப்புடைய) பெண்போலச் சிறந்த அழகு பெற்ற

துண்டோ? (இதுவரை இல்லை). ஆராய்ந்தால், (நான் காண்கின்ற இவ் உரு) மின்னுருவோ அல்லது பெண்ணுருவோ என்று தெரிகிலேன். (எது என்று தெளியேனாயினும் இவ்வுருவை வெளியே) கண்ணிலும் (உள்ளே) கருத்திலும் காண்கின்றேன். விண்ணின் - மேகத்திலிருந்து. இம்முறை - இப்படி. பெண்ணின் - பெண்போல. நல் நலம் - சிறந்த அழகு. 'நல்லறம்' என்பதில் 'நல்' சிறந்த என்று பொருள்படல் காண்க.

"என்று, இடைச்சொல்; பெயர்ப்பொருளில் வந்தது; என்பது என்று பொருள்படும்". "காண்பன் என்பதிற் பகரவிடைநிலை தனக்குரிய எதிர்காலத்தைக் குறியாது நிகழ்காலத்தைக் குறித்து நின்றது".

134. வள்ளற் சேக்கைக் கரியவன் வைகுறும்
வெள்ளப் பாற் கடல் போல் மிளிர் கண்ணினாள்
அள்ளற் பூமகள் ஆகும் கொ லோ?என(து)
உள்ளத் தாமரை உள் உறை கின்றதே.

இ - ள். இருண்ட நிறமுள்ள பாம்பாகிய படுக்கையையுடைய கரிய நிறத்தினன் (ஆகிய திருமால்) தூங்குகின்ற வெண்மையான பாற் கடல்போல விளங்குகின்ற கண்ணினையுடையாள் (ஆகிய அவள்), என்னுடைய மனத் தாமரைமலரில் வசிக்கின்றதனால், தாமரை மலரில் இருக்கும் இலக்குமிதானோ?

சேக்கை - படுக்கை - சர்ப்ப சயநம். கரியவன் - திருமால். வைகல் - துயிறல் (*சிலப்பதிகாரம்)—தூங்குதல்.

இந்த மிதிலைக்காட்சிப்படலம் கஙசு-ம் பாட்டில் 'புட்டிருப்பாகன்' என்பதில் புள் (-பறவை), கருடப்புள்ளைக் குறித்ததுபோல, 'சேக்கைக் கரியவன்' என்பதிற் சேக்கை, பாம்புச்சேக்கையைக் குறித்தது. 'வள்ளல் சேக்கை' - பாம்பாகிய படுக்கை என்ற உரை உண்டு. இதற்கு ஆதாரமாக, 'வள்ளல்' என்ற சொல் 'பாம்பு' என்ற பொருளில் எங்கும்

* இனி, இவ்வாறு மஹாமஹோபாத்தியாய சாமிநாதையரவர்கள் பதிப்பித்திருக்கும் நூல்கள் மேற்கோள்களாகக் காட்டப்படுமிடங்களில், அந் நூல்கள் அவற்றின் அரும்பத அகராதிகளைக் குறிப்பனவாகக் கொள்க.

பிரயோகிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை: வெள் அப் பாற்கடல் - வெண்மையான அந்தப் பாற்சமுத்திரம்; வெள்ளப் பாற்கடல்—பெருக்கு உடைய பாற்கடல் எனலுமாம். மிளிர்தல் - ஒளிர்தல். அள்ளல் பூமகள்- சேற்றில் (உண்டாகும் தாமரை) மலரில் (வசிக்கும்) பெண் - இலக்குமி. உறைகின்றது-உறைகின்றதனால்: இந்த மிதிலைக்காட்சிப்படலம் அச-ம் பாட்டில் 'காய் எரியால் கரிய' என்பது 'காய் எரிக்கரிய' எனவும், கடிமணப்படலம் கூ0-ம் பாட்டில் 'தடக்கையால் பிடித்தான்' என்பது 'தடக்கை பிடித்தான்' எனவும் வருதல்போல, இங்கே 'உறைகின்றதால்' என்பது 'உறைகின்றது' என வந்தது.

கருமையும் குளிர்மையும் பரப்பும் காணுதற் கினிமையும் உடைமைபற்றிக் கடலை மாதர்கண்ணுக்குவமித்தல் மரபு. வெண்மையான பாற்கடல் கண்ணின் வெண்மையான பாகமாகிய வெள்விழிக்கும், அந்தப் பாற்கடலின் மத்தியில் மண்டலித்த கரிய சர்ப்பசயனம் கண் நடுவில் உள்ள வட்டமான கரிய பகுதியாகிய கருவிழிக்கும், அந்தச் சர்ப்பசயனத்திற் கண்வளரும் கரிய திருமால் அந்தக்கருவிழியில் தோன்றும் கிருஷ்ணனுக்கும் உவமை. ஒன்றோடொன்று தொடுத்த சம்பந்தமுடைய மூன்று உவமேயங்களுக்கு அவைகள்போல விடாத தொடர்புள்ள மூன்று உவமானங்களை ஒருசேரப் பொருத்தமாக எடுத்துத் தொடுத்தது மிக்க இனிமை விளைப்பது.

ஒருவருடைய கண்ணுள்ளே உற்றுநோக்குவோரது பிரதிபிம்பமாய் நோக்கப்பட்ட அந்தக் கண்ணினுள்ளே தோன்றும் வடிவத்தைக் 'கிருஷ்ணன்' என்பது உலகவழக்கு. இந்த வடிவத்தைக் "கண்மணியிற் பாவை" என்பர் வள்ளுவர் (குறள். ககஉரு). உவமேயத்திற் குறிப்பாக வுள்ள 'கிருஷ்ணன்' என்ற சொல்லும் உவமானத்தில் வெளிப்படையாக வுள்ள 'கரியவன்' என்ற சொல்லும் 'கருநிறமுள்ளவன்' என்றுபொருள்படலும் அந்த இரண்டு சொற்களும் திருமாலைக் குறித்தலும் மேற்கூறிய விசேடவுரையின் பொருத்தத்தையும் கம்பரது கவிநுட்பத்தையும் விளக்குதல் காண்க.

135. அருள் இ லாள் எனி னும், மனத்(து) ஆசையால்
வெருளும் நோய் விடக், கண்ணன் விழுங்கலால்,

தெருள் இ லா உல கிற் சென்று நின்று வாழ்
பொருள் எ லாம் அவள் பொன் உரு ஆனவே.

இ-ள். (அவள் என்மீது) இரக்கமில்லாதவளாயினும், (நான் அறிவின்றி அவள்மேற்கொண்ட) ஆசையினுல் (உண்டாகிய) பயங்கரமான (விரக) நோய் தீரும்படி, (மருந்தாக அவளை என்) கண்களா (கியவாயா)ல் விழுங்கியதனுல், (என் கண்களுக்குச்) சகல சராசரப்பொருள்களும் அவளுடைய அழகிய வடிவமாகிவிட்டன.

வெருளும் என்ற தன்வினை வெருள்விக்கும் என்ற பிறவினைப் பொருள் தந்து நின்றது. வெருளல் - அஞ்சுதல். நோய் விட - வியாதி நீங்க. தெருள் - தெளிவு. சென்று நின்று வாழ்பொருள்கள் - இடம் பெயர்ந்தும் இடம் பெயராதும் வாழும் (இருவகைப்) பொருள்கள் - சராசரப் பொருள்கள். பொன் உரு - அழகுடைய வடிவம். அசரப் பொருளில், மரங்கள் முதலிய உயிருள பொருள்களும், மலைகள் முதலிய உயிரில் பொருள்களும் அடங்கி யுள்ளன. திசை தெரியாது மயங்கியவன் 'திசை மயங்கியது' என்பது போல, உலகப் பொருள்களெல்லாவற்றையும் சீதா தேவியாக மயங்கிக் காணும் தம் தெருளாமையை இராமர் உலகின்மேல்வைத்துத் 'தெருளிலாவுலகம்' என்றுரென்று கவி கூறிய நுட்பம் கவனிக்கத்தக்கது.

136. வண்ண மேகலைத் தேர் ஒன்று, வாள் நெடும்
கண் இ ரண்டு, கதிர் முலை தாம் இரண் (டு)
உண் நி வந்த நகையும் என் (று) ஒன்(று) உண்டால்;
எண் ணும் கூற்றினுக் (கு) இத் தனை வேண்டுமோ!

இ-ள். அழகிய மேகலாபரணம் அணிந்த தேர் (போன்ற அரை) ஒன்று, வாள் (போலும்) நீண்ட கண்கள் இரண்டு, இறுமாந்த தனங்கள் இரண்டு, (மனத்தினுல்) அனுபவித்தற்குரிய பல்வரிசை ஒன்று (ஆகிய இவைகள், யான்) நினைந்துகொண்டேயிருக்கின்ற (கன்னியாகிய) இயமனுக்கு உண்டு. (இவற்றுள் ஒன்றைக்கொண்டே என்னைக் கொன்றுவிடலாம். அப்படியிருக்க, என்னைக் சொல்லுதற்கு உதவியாக)இத்தனை (ஆயுதங்கள்) வேண்டுமோ!

வண்ணம் - அழகு. கதிர்த்தல் - இறுமாத்தல் (சங்க அகராதி). கதிமுலை என்ற பாடத்தில், கதித்தல், எழுதல் என்ற பொருளுடையது. உண்ணல் - அநுபவித்தல் (ஐங்குறுநூறு). நிவந்த—மேலான(—ஐங்குறுநூறு). எண்ணும் - 1 (கண்டார் அஞ்சி)மதிக்கும்; 2. நினையும் - நினைந்து கொண்டேயிருக்கப்பட்ட. இப்பாட்டு, பின்வரும் இனிய பாட்டுக்களின் கருத்தை உட்கொண்டது.

பண்டறியேன் கூற்றென் பதனை இனி அறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு (குறள்-கoஅரு).

கண்ணினு லின்று கண்டாம் கூற்றினை; காமர் செவ்வாய்
ஒண்ணுதல் உருவக் கோலத் தொருபிடி நுசுப்பிற் றீஞ்சொல்
வண்ணித்த லாவ தில்லா வருமுலை மதர்வை நோக்கின்
பெண்ணுடைப் பேதை நீர்மைப் பெருந்தடங் கண்ணிற் றம்மா.
(சீவக சிந்தாமணி-2458)

137. கொள்ளை கொள்ளக் கொதித்(து) எழும் பாற்கடற்
பள்ள வெள்ளம் எனப் பட ரும் நிலா
உள்ள உள்ள உயிரைத் துருவிட:
வெள்ளை வண்ண விடமும் உண் டாம்கொலோ?

இ—ள். (கரை மீதுள்ள பொருள்களைக்) கவரும்படி பொங்கியெழுகின்ற பாற்கடற் பெருவெள்ளம்போல, நிலாவானது (என்) உயிரை (க் கவருதற்கு அதனை) த் தேடும்படி பரவுகின்றது. (ஆலகால விடம் உலகெங்கும் பரந்து உயிர்களைக் கவர்ந்ததென்று கேட்டிருக்கின்றேன். அதன் நிறம் கரிது. அது போலப் பரந்து உயிரைக் கவரும் இந்த நிலாவோ வெண்மையானது. ஆதலால், நான் இதுவரை கண்டேனும் கேட்டேனும் இல்லாத) வெண்ணிற விடமும் இருக்கின்றதோ?

கொள்ளைகொள்ளல்—கவர்தல். கொதித்தல்—பொங்குதல். பள்ள வெள்ளம்—(பரப்போடு)ஆழமுடைய பெருக்கு. படருதல்—1. பரவுதல்; 2. செல்லுதல். உள்ள —1. நினைக்க; 2. இருக்கின்ற. உள்ள உள்ள உயிர்—(அவளை) நினைக்க இருக்கின்ற உயிர்—(வேறெப்பயன்கருதியும் வாழ்தல் இல்லாமல் அவளை) நினைத்தற்கே (வாழ்ந்து) இருக்கின்ற

உயிர். துருவுதல்—(கவருதற்காகத்) தேடுதல். 'நிலா, வெள்ளமென்ன, உயிரைத்துருவிடப் படரும்' எனக் கூட்டுக. 'உள்ள முள்ளூற்றுயிரைத் தொடருமால்' என்றும் பாடம்.

138. "ஏதும் நல் வழி அல்வழி என் மனம்
ஆது மோ? அதற்(கு) ஆகிய காரணம்
பாகு போல் மொழிப் பைந் தொடி கன்னியே
ஆகும்; வே(று) இதற்(கு) ஐயுற(வு) இல்லையே"

இ. ள். "என் மனம் நல்ல வழியிலே செல்லும் (இயற்கையுள்ளது); அது தீய வழியிலே (செல்வது) ஆதுமோ? (ஆகாது. நல் வழியிலேயே செல்வதாகும்) அதற்கு (—இச் சமயத்தில் நல்வழியிற் சென்றதற்கு—அவள் பாற் சென்றது நல்வழியென்பதற்குத்) தகுதியான காரணம் அவள் கன்னிகை (யாயிருத்தல்) ஆகும்: இதற்கு வேறு (காரணமிருப்பதாகச்) சந்தேகமில்லை."

அல்வழி—(நல்வழி) அல்லாத (தீய) வழி. பைந்தொடி—பசுமையான (பொன்) வளையல் (உடையாள்). கன்னி—கல்யாணமாகாதபெண். ஐயுறவு—சந்தேகம்.

'ஏகும் நல்வழி அல்வழி' என்பதற்குச் 'செல்லுதற்குரிய நல்வழி அல்லாத(தீய)வழி' யென்றும் பொருள் கொள்ளலாம்.

இத்திரட்டின் 132-ம் பாட்டில் உள்ள 'கனியும்போல்பவன்' என்பதை எழுவாயாகவும் 133 முதல் இந்த 138-ம் பாட்டுவரை கூறியிருப்பதைச் செய:படுபொருளாகவும் கொண்டு 'என்றான்' என்ற பயனிலை வருவித்துப் பொருண்முடிபுசெய்க.

எப்பொழுதும், தீய கருத்துக்களைத் தோன்றினமாத்திரையே விலக்கி, நல்ல கருத்துக்களைமட்டும் தொடுத்துச் சிந்திக்கும் இயல்புடையாரது மனத்திலே அபூர்வமாக ஒரு கருத்துத்தோன்றி நீடித்திருப்பதானால், அது தீக் கருத்தாயிருத்தல் இயல்பன்றென்பதைக் குறிப்பித்துக் கம்பர் தம் கதாநாயகாது மனத்தூய்மையை இந்தப் பாட்டிற் புலப்படுத்தியிருக்கின்றார். இங்கே இராமர் கூறியதுபோலச் சாகுந்தலநாடகத்தில், கதாநாயகன் கதாநாயகியை ஆலோசியாது காதலித்த

பின்பு அவள் மணஞ்செய்தற்குரியளோ என்ற சந்தேகம் தோன்றிய போது கூறியதையும், அவள் கொண்டிருந்த தவவேடம் நிலையான தன்றென்றும் அவளைவளர்த்த பிதா அவளைக் கல்யாணம் செய்விக்கக் கருதியுள்ளாரென்றும் தெரிந்தபோது அவன் தன் மனத்தை நோக்கி, 'மனமே! நீ தீண்டக்கூடாத தீக் கங்கென்று பயந்தவள் மகிழ்ந்து வணைந்துகொள்ளும் மாணிக்கமாயுள்ளாள்' என்று கூறியதையும் இப்பாட்டு நினைவுகூரச் செய்கின்றது.

சீதாபிராட்டிபோல இராமபிரானும், மாலை, மாலைக்குப் பின்னும் நிலவுக்கு முன்னும் உள்ள இருள், நிலவு ஆகிய மூன்றினாலும் வருந்தினாராயினும், சீதாதேவி அம் மூன்றையும் நொந்தாரென்றும், இராமர் நிலவைமட்டும் நொந்தாரென்றும் கவி கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. இதன் காரணம் இராமரது விரகதாப வருணனையைக் கவி ஆரம்பிக்கும் சமயம் மாலையும் இருளும் நீங்கிச் சந்திரோதயமாயிருந்ததே. அதுவரை இராமர் விசுவாமித்திராதியரோடிருந்ததனால் தம் வேட்கையை அடக்கியிருந்தாரென்பது தெளிவாம்.

[இரவு கழிந்தது. இராத்திரியாகிய இராசனது வெண்கொற்றக் குடை வீழ்ந்தாற்போலவும் மேற்றிசைப் பெண்ணின் முத்துச்சுட்டி அற்றுவீழ்ந்தாற்போலவும் சந்திரன் மேற்புறக் கடலுள் தாழ்ந்து மறைந்தான். திசைகளாகிய மாதர்கள் தங்கள் நாயகனாகிய சந்திரன் பிரிந்துபோனதனால்; தங்கள் மேலேபூசியிருந்த வெண்கலவைச்சாந்தை அழித்தாற்போலச் சந்திரிகை ஒழிந்தது. அந்தச்சமயத்திலே, கருமையான யானைத்தோலைப்போர்த்த சிவபெருமான்போல, இருள்மூடிய உதயகிரியிலே, அக் கடவுளது நெற்றியைப்பிளந்து விளங்கும் சிவந்த அக்கினிக்கண்போலச் செஞ்ஞாயிறு உதயமாயினது].

வேறு.

139. பண்டு வரும் குறிபகர்ந்து பாசறையில்
பொருள் வயினில் பரிந்து போன
வண்டு தொடர் நறும் தெரியல் உயிர் அனைய
கொழுநர் வர மணித்தே ரோடும்,

கண்டு, மனம் களி கூர ஒளி சிறந்து
மெலி வகலும் கற்பி னார் போல்,
புண்டரிக முகம் மலர, அகம் மலர்ந்து
பொலிந்தன பூம் பொய்கை யெல்லாம்.

இ - ள். (பிரியும்) முன் (திரும்பி) வரும் (காலத்தின்) அடையாளத்தைச் சொல்லிப் போரையும் பொருளையும்விரும்பி (ப் பிரிந்து)போன நாயகர் வரக்கண்டு, உளம் களிகூர (உடல்)ஒளிமிகுந்து (பிரிந்த) மெலிவு நீங்கும் கற்புடையமாதர்போல, (சூரியன் தேரில் வரக்கண்டு) தடாகங்களெல்லாம், தாமரைமுகங்கள் மலராநிற்க, (அழகு மிகுந்து) விளங்குவனவாயின.

பண்டு - முன். வரும்குறி - திரும்பிவரும் காலத்தின் அடையாளம், அதாவது கார்கால ஆரம்பம் என்பது போன்றது. பாசறை - பகைவர்மேல் யுத்தஞ்செய்யச் சென்றோர் தங்கும் இடம்; இது பாடிவீடு படைவீடு என்றும் கூறப்படும்; இங்கே போர்வயிற்பிரிதல் (-யுத்தம் காரணமாக நாயகர் தம் நாயகிகளைப் பிரிதல்) குறித்து நின்றது. பரிந்து—1. அன்புகொண்டு - விரும்பி; 2. விரைந்து. சிறத்தல் - மிகுதல்.

பொய்கைகளுக்குக் கற்புடையமாதரும் அவைகளைச் சூரியன் பிரியும் காலமாகிய அத்தமனசமயத்துக்கு நாயகர் பிரியும் காலமும் தாமரைகளுக்கு மாதர் முகங்களும் இரவுக்கு நாயகநாயகியர் பிரிந்திருக்குங் காலமும் இரவில் தாமரைகள் கூம்பியிருத்தலுக்குப் பிரிவுக்காலத்தில் மாதர்முகங்கள் வாடியிருத்தலும் உதயகாலத்திற் சூரியன் தேரில் உதித்தலுக்குத் தாம் வரக்குறித்த காலத்தில் நாயகர் தேரில் வரலும் தாமரைகள் மலர்ந்து பொய்கைகள் பொலிதலுக்கு முகமலர்ந்து மாதர்கள் ஒளி சிறத்தலும் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உவமானங்களாயிருத்தல் கண்டு களிக்கத்தக்கது.

140. எண் அரிய மறையினெடு கின்னரர்கள்
இசை பாட உலகம் ஏத்த,
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும்
கரம் குவிப்ப, வேலை என்னும்
மண்ணு மணி முழ(வு) அதிர, வான் அரங்கில்
நடம் புரி வாள் இரவி ஆன
கண் நுதல் வா னவன் கனகச் சடை விரிந்தால்
என விரிந்த கதிர்கள் எல்லாம்.

இ-ள். வேத (பாராயண)த்துடன் கின்னரர்கள் இசைபாடவும், (ஞானத்தினும் பக்தியினும்) உயர்ந்தோர் துதிக்கவும், தேவர்களும் தபோதனரும் அந்தணரும் அஞ்சலிவந்தனஞ் செய்யவும், சமுத்திரமாகிய முரசு முழங்கவும் ஆகாயமாகிய நடனசபையில் நர்த்தனம் செய்யும் சூரியனுகிய சிவனுடைய பொன்னிறச்சடை (நர்த்தனம் செய்தலால் அவிழ்ந்து நாற்றிசையும்) பரந்தாற்போல (ச் சூரிய) கிரணங்கள் (எங்கும்) பரந்தன.

எண்ணரிய—அளவில்லாத. மறை—வேதம். இசை —1. இராகம்; 2. புகழ். மறையினெடு இசைபாட—1. வேதத்தை (உச்சரித்தலுடன்) இராகத்தோடுபாட; 2. வேதத்துடன் புகழைப்பாட. உலகம்—உயர்ந்தோர். கரம்—கை. வேலை—கடல். மண்ணும் மணி முழவு—மார்ச்சனை பூசப்பட்ட அழகிய முழவு. அதிர்தல்—முழங்குதல். வான்—ஆகாயம். அரங்கு—நடனசாலை. வாள்—ஒளி. இரவி—சூரியன். கண் நுதல் வானவன்—(ஒரு) கண் நெற்றியில் (உள்ள) தேவன்—சிவன். கனகச் சடை—பொன் (நிறச்) சடை.

ஆகாயம் சிற்சபைக்கும், சூரியன் அச்சபையில் ஆடும் சிவனுக்கும் உதய சூரியனது சிவந்த கதிர்க் கற்றை சிவனுடைய செஞ்சடைக் கற்றைக்கும், அந்த உதய சூரியன் எதிரிற் கடல் ஒலித்தல் நடேசர் சந்நிதியில் முரசு முழங்குதலுக்கும் ஒப்பு. கின்னரர் வேதத்துடன் இசைபாடலும் விண்ணவரும் முனிவரும் வேதியரும் கரம் குவித்தலும் ஆகிய வழிபாடுகள் உதயசூரியனுக்கும் சிவனுக்கும் பொது.

(தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

உ

திருமங்கையாழ்வாரின் காலம் எது?

திருமங்கையாழ்வாரின்காலத்தைப்பற்றித் தென்னிந்திய சரித்திர ஆராய்ச்சிக்காரர்களுள் நீண்டகாலமாய்ப் பத்திரிகைவாயிலானும் புத்தகமூலமாயும் பெரும்போர் நிகழ்ந்துவருகிறது. இவர் எந்தக்காலத்தில் இருந்தார் என்று நிச்சயமாய்த் தெரியாவிட்டாலும் இவர் எழுதியுள்ள பாசுரங்களின் உதவிபால் ஒருவாறுநிச்சயிக்கலாம். இவர் இயற்றியுள்ள 1253 பாசுரங்களுள் ஒருசில, அக்காலத்து மிகவும் கீர்த்திபெற்றிருந்த தென்னிந்திய மன்னரையும், போரில்நிகழ்ந்த வெற்றிகளையும் இதர சரித்திரநிகழ்ச்சிகளையும் குறிப்பிடுகின்றன. இவற்றின் உதவியாலும் சமீப சரித்திர ஆராய்ச்சியிற் கிடைத்துள்ள பல்லவ வம்சத்தாரின் சிலாசாஸனங்களின் உதவியாலும் திருமங்கையாழ்வாரின் காலத்தை ஒருவாறு நிர்ணயிக்கக்கூடும்.

திருமங்கைமன்னன் வைணவ ஆழ்வார்களுள், கடைசியானவர் என்பது மட்டில்,

"பொய்கையார்பூதத்தார்பேயார்புகழ்மழிசை
ஐயனருள்மாறன்சேரலர்கோன்—துய்யபட்ட
நாதனன்பர்தாட்டூளிநற்பாணன்நன்கலியன்
ஈதிவர்தோற்றத்தடைவாமிங்கு".

என்று மணவாளமாமுனிகள் அருளிச்செய்துள்ள ஆழ்வார்களின் அவதாரக்கிரமச்செய்யுளாலும், வேதாந்ததேசிகர் அருளிச்செய்த அதிகார சங்கிரஹத்துள்ள,

"பொய்கைமுனிபூதத்தார்பேயாழ்வார்தண்
பொருநைவருங்குருகேசன்விட்டுசித்தன்
துய்யகுலசேகரனம்பாணநாதன்
தொண்டரடிப்பொடிமழிசைவந்தசோதி

வையமெலாமறைவிளங்கவாள்வேலேந்து
மங்கையர்கோனேன்றிவர்கள்மகிழ்ந்து பாடுஞ்
செய்யதமிழ்மாலைகணுந்தெளியவோதித்
தெளியாதமறைநிலங்கடெளிகின்றோமே".

என்னும் செய்யுளாலும் நன்குவிளங்குகிறது. மேலும், திருமங்கை மன்னன் தனக்கு முற்காலத்திருந்த ஆழ்வார்கள் சென்று பாசுரங்கள் இயற்றாத அநேக திவ்விய தேசங்களைத் தமது பாசுரங்களிற் பாடியிருப்பது இக்கொள்கையை வற்புறுத்தும்.

நிற்க, திருமங்கையாழ்வார் அடிக்கடி தமது பாசுரங்களில் அக்காலத்துத் தமிழ்மன்னரையும் இதர ராஜீய சம்பவங்களையும் குறிப்பிட்டிருக்கிறார் என்று முன்பே சுட்டியுள்ளோம். இவற்றுள், பல்லவரின்புகழைப் பன்முறை தமது பாசுரங்களில் இறந்தகாலத்திலும் நிகழ்காலத்திலும் இவர் குறிப்பிடுவதிலிருந்து இவர் பல்லவமன்னர் தென்னிந்தியாவில் ஆட்சிசெய்திருந்தகாலத்தில் இருந்தவர் என்று நன்கு விளங்குகிறது. சமீப சரித்திர ஆராய்ச்சியின் ஆதாரத்தால், பல்லவ வம்சத்தார் காஞ்சீபுரத்தைத் தலைநகராகக்கொண்டு கி. பி. மூன்றாம் நூற்றாண்டுமுதல் சுமார் 9-ஆம் நூற்றாண்டுவரை தொண்டைமண்டலத்தில் ஆட்சிபுரிந்துவந்தனர் என்றும், அவர்கள் சிவபக்தியும் விஷ்ணு பக்தியும் நிறைந்தவரென்றும், அநேக ஆலயங்களைக் கட்டினார்களென்றும் தெரிகிறது. எனவே,

'பல்லவன் வில்லவ னென்றுலகிற் பலராய்ப் பலவேந்தர் வணங்கு கழற் பல்லவன் மல்லையர்கோன்' 'பார்மன்னுதொல்புகழ்ப் பல்லவர் கோன்' என்பன ஆதியவற்றால், பல்லவஅரசரின் பெருமையையும் ஆட்சியின் பரப்பையும் அவர் வெற்றியையும் பாடியிருக்கும் நமது ஆழ்வார் பல்லவர் இறுதிக்காலமான கி. பி. 9-ஆம் நூற்றாண்டுக்கு முந்தியே இருந்திருத்தல்வேண்டும். மேலும், கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலோ அதற்குச் சற்றுப் பிந்தியோ சோணாட்டில் ஆட்சிசெய்திருந்த கோச்செங்கணான் என்னும் அரசனை ஆழ்வார் திருநறையூர்ப்பதிகத்திற் புகழ்ந்திருப்பதால் ஆழ்வார் இச்சோழமன்னருக்கு வெகுகாலம் பிந்தியவர் என்பது வெளியாகின்றது.

மேற்குறித்தவற்ருல் திருமங்கையாழ்வார் கி. பி. மூன்ரு நூற்ருண்டுக்குப்பின்னர்க் கி. பி. 9-ம் நூற்ருண்டுக்குள் இருந்திருக்கவேண்டும் என்பது ஒருதலே. இவர் அட்டபுயகரப் பதிகத்தின் இறுதிச்செய்யுளில் வயிரமேகன் என்ற மன்னனைக் குறிப்பிட் டிருக்கிருர். அச்செய்புளாவது :—

மன்னன்தொண்டையர்கோன்வணங்குநீண்முடிமாலேவயிரமேகன்
தன்வலிதன்புகழ்சூழ்ந்தகச்சியட்டபுயகரத்தாதிதன்னைக்
கன்னிநன்மாமதின்மங்கைவேந்தன்காமருசீர்க்கலிகன்றிகுன்ரு [தமே.
இன்னிசையாற்சொன்னசெஞ்சொன்மாலேயேத்தவல்லார்க்கிடம்வைகுந்

இப்பாசுரத்தின் பொருளைப்பற்றித் தென்னிந்திய சரித்திர ஆராய்ச்சிக்காரர்களுள் வெகுகாலமாய்ப் பெரும்போர் நிகழ்ந்துவருகிறது. சென்னைச் சர்வகலாசாலேயில் இந்திய சரித்திர வித்வான் ஸ்ரீமான் டாக்டர் S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரும் லெக்ஸிகன் கமிட்டி தமிழ்ப்பண்டிதர் மு. ராகவையங்கார் அவர்களும் இப்பாசுரத்திற் குறிக்கப்பட்டிருக்கும் வயிரமேகன் என்னும் மன்னன் இரட்டபாடி அரசன் என்றும் தொண்டைமன்னனல் அவன் வணங்கப்படுபவன்என்றும் கச்சியை அந்த இரட்டபாடி அரசனின் வலியும் புகழுஞ் சூழ்ந்திருப்பனவென்றும் பொருள்செய்து, அவ்வரசன் இரண்டாவது தந்திதுர்க்கனென்றும், அவனே வயிரமேகனென்ற பட்டப்பெயருடையவனென்றும், அவன் காஞ்சியின்மீது படையெடுத்துவந்தவனென்றும், ஆழ்வார் அக்காலத்துத் தொண்டைமன்னஞன நந்திவர்மன் பல்லவமல்லன்காலமான 8-ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் இருந்தவர் என்றும் கருதுவர்.

ஆனல், காலஞ்சென்ற ஸ்ரீமான். வீ. வெங்கையரோவெனில் வயிரமேகன் என்பது பல்லவசிலாசாஸனங்களில் 'வயிரமேகதடாகம்' 'வயிரமேகச்சதுர்வேதிமங்கலம்' 'வயிரமேகவாய்க்கால்' என்றுவருவதைக் கவனித்து கி. பி. 9-ம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் விளங்கியிருந்த பல்லவமன்னஞன தந்திவர்மன் என்பவனே ஆழ்வாராற்குறிக்கப்பட்ட வயிரமேகன் என்றும் அவனுடையகாலமே ஆழ்வாரது காலமென்றும் 'திருவல்லிக்கேணித் தந்திவர்மன்சிலாசாஸனம்' என்ற தலேப்பின்கீழ் மிகுந்த ஆராய்ச்சித்திறத்துடன் எழுதியிருக்கிருர். (E. P. Ind. Vol. 8, p. 290).

சமீபத்தில் ஸ்ரீமான் K. G. சேஷையர் அவர்கள் இவ்விஷயமாய் ஆராய்ச்சிசெய்து 'திருமங்கையாழ்வாரின்காலம்" என்று பங்களூர் மிதிக் ஸொஸைடியின் போனவருஷத்திய சஞ்சிகையில் எழுதியிருக்கிறார்கள். ஸ்ரீமான் சேஷையர் ஆழ்வார் பாசுரத்திற் குறிக்கப்பட்டிருப்பவன் ஒரே அரசன் என்றும், அவன் பல்லவ வம்சத்தவன் என்றும், பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தின் குறிப்புகள் இதை வலியுறுத்துவனவென்றும், எடுத்துக்காட்டி வயிரமேகன் என்னும் பல்லவ மன்னன் மூன்றாவது நந்திவர்மனான தெள்ளாற்றெறிந்த நந்திப்போத்த வர்மனென்றும், அவன் இருந்தகாலமான கி.பி. 9-ம் நூற்றாண்டே ஆழ்வார்காலமென்றும் ஆராய்ந்து எழுதியிருக்கிறார்கள்.

தஞ்சை ராவ்பஹதூர் K. S. ஸ்ரீநிவாஸபிள்ளையவர்கள் தாம் எழுதியிருக்கும் "தமிழ்வரலாறு" என்னும் நூலில் (பக். 122–129) ஸ்ரீமான் K. G. சேஷையர் அபிப்பிராயங்களைப் பெரும்பாலும் அநுசரிக்கிறார்கள்.

ஆனால், ஸ்ரீமத் சேஷையர் சீனிவாஸபிள்ளை இவர்கள் கூற்று ஒரு பாகத்தில் உண்மையெனினும், ஒரு பாகத்திற் பொருந்தாதிருக்கிறது. ஆழ்வார் குறித்திருக்கும் வயிரமேகன் பல்லவனே யென்கிறமட்டில் (அது பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தை அநுசரித்திருப்பதாலும் பாசுரத்திற்கு இயற்கையான பொருளைத் தருவதாலும்) இவர்கள்கூற்று உண்மையெனலாம். ஆனால் வயிரமேகன் என்பவன் எந்தப் பல்லவமன்னன் என்ற விஷயத்தில் இவர்கள் கூற்றுக்குப் போதுமான ஆதாரவில்லை; என்னை? மூன்றாவது நந்திவர்மன் ஆழ்ந்த சிவபக்தன் என்பது வேலூர்பாளையச்செப்பேடுகளின் இறுதியிற் குறிக்கப்பட்டிருக்கும்வடமொழிச்சுலோகத்தாலும் நந்திக்கலம்பக 97ம்பாட்டில்வரும் 'சிவனைமுழுதுமறவாதசிந்தையன்'என்ற குறிப்பாலும் நன்குவிளங்கும். ஆழ்வார் பரமவைஷ்ணவ பக்தராதலின், சிவபக்தியுள்ள மன்னனைத் தமது பாசுரங்களிற் பாடியிருததல் அரிது.

ஆயின் வயிரமேகன் யார்? மூன்றாவது நந்தியின்பாட்டனான நந்திவர்மன் பல்லவமல்லனேயாகும். இவனே ஒருசமயம் நந்திபுரத்தில் தமிழ்அரசர்களால் முற்றுகைபோடப்பட்டுப் பிறகு உதயசந்திரன் என்

னும் தனது சேனபதியின் உதவியின்மூலமாய்த், தமிழ்மன்னரைப் பன்முறை 'நெடுவயல்' பாழி முதலிய யுத்தகளங்களில் முறிய அடித்த வன். இவனே நந்திபுரவிண்ணகரம் முதலான பல விஷ்ணுவாலயங்களுக் குத் திருப்பணிசெய்தவன். இது திருமங்கையார் நந்திபுரவிண்ணகரப் பதிகச்செய்யுள்களால் விளங்கும். இம்மன்னனையே தண்டத் தோட்டத்துச்சாஸனம், 'அச்சுதனைத் தன் ஹிருதயசன்னிஹிதமாக வுடையவன்' என்றும், 'முகுந்தனைவிட ஒருவரையும் வணங்கியறியாத முடியுடையன்' என்றும் புகழ்வது இவனது விஷ்ணுபக்தியைக் காட்டும். இம்மன்னனையே திருமங்கையாழ்வார் அட்டபுயகரப்பாசுரத்தில் 'மன்ன வன்றொண்டையர்கோன் வணங்கு நீண்முடிமாலை வயிரமேகன்' என்று பாடியிருப்பதாய்த் தோன்றுகிறது. இம்மன்னன் 62 வருஷம் ஆட்சி புரிந்தனன்; எனவே திருமங்கையாழ்வார் அக்காலத்துச் சரித்திர நிகழ்ச்சிகளில், சிலவற்றை இறந்தகாலத்தில், சிலவற்றை நிகழ்காலத் தில், சுட்டுவது இயல்பாகும். அட்டபுயகரப்பாசுரத்தில் இறந்தகாலத் தில் எழுதாது நிகழ்காலத்ததாகக் குறிப்பிட்டிருப்பது ஆழ்வார் வயிர மேகன் சமகாலத்தவர் என்பதைக் காட்டும். ஆனல் வயிரமேகன் என்ற பெயர் பல்லவமல்லனுக்கு இருந்ததாய்ச் சிலாசாஸனங்களின் ஆதாரம் ஒன்றும் இல்லை. எனினும், இனிவரும் சாஸனங்களில் இத் தகைய சான்று ஏற்படலாம். மேலும், மஹாபலிபுரத்துச் சிலாலிகி தங்களில் 'மஹாமேகன் ஸ்ரீமேகன் என்று பல்லவமன்னருக்குப் பட்டப்பெயரும் பிருதுகளும் இருப்பதைக் கவனித்தால், 'வயிரமேகன்' என்பதும், பெரியவாச்சான்பிள்ளை சொல்கிறபடி பல்லவர்க்குக் குடிப்பெயராகும்.

மேற்கூறியவற்றல், திருமங்கையாழ்வார் எட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதி தொடங்கிச் சுமார் 62 வருஷங்கள் ஆண்டிருந்த நந்திவர்மன் பல்லவமல்லன் காலத்தவர் என்று ஒருவாறு நிச்சயிக்கலாம். காலஞ் சென்ற ஸ்ரீமான்கள் வெங்கையரும் து. அ. கோபிநாதராயரவர்க ளும் (History of Sri Vaishnava's பக் 25–6) தனித்தனி ஆதாரங்

களைக்கொண்டு ஆழ்வார்பாசுரத்திற் குறிக்கப்படும் வயிரமேகன் தந்திவர்மனென்றும் அவன்காலமே ஆழ்வார் காலமென்றும், கருதினர். முன்பே குறிப்பிட்டபடி ஸ்ரீமான் Prof. கிருஷ்ணஸாமி ஐயங்காரும் மு. ராகவையங்காரும் சுமார் இருபது வருஷங்களுக்குமுன்பே வெளியிட்டிருந்த அபிப்பிராயத்தை ஒட்டியே வயிரமேகன் இரண்டாவது தந்திதுர்க்கனென்றும், அவன் சமகாலத்தவனான நந்திவர்மன் பல்லவமல்லன் காலமே ஆழ்வார்காலமென்றும் கருதாநிற்பர். Justice K.G. சேஷையரும் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸ பிள்ளையும் மேற்கூறியவற்றிற்கு விரோதமாக மூன்றாவது நந்திவர்மனே வயிரமேகனென ஆழ்வாரால், சுட்டப்பட்டிருக்கலாம் என்கின்றனர். இவர்கூற்றிற்கு ஆதாரமாய்த் தண்டத்தோட்டச்சாஸனத்தைக் குறிப்பிட்டு அதன் ஆதாரத்தைக்கொண்டு மூன்றாவது நந்திவர்மன் விஷ்ணுபக்தனெனக் கருதுகின்றனர். ஆனால், தண்டத்தோட்டத்துச் செப்பேடுகள் உண்மையில் இரண்டாவது நந்திவர்மனான பல்லவமல்லன்காலத்தனவேயாம்.

மேற்கூறியவற்றால் இரண்டாவது நந்திவர்மன் (அதாவது நந்திவர்மன்பல்லவமல்லன்) காலமே ஆழ்வார் இருந்தகாலம் என்பது ஒருவாறு நிச்சயப்படுகிறது. எனவே ஆழ்வாரின்காலம் இவ்வரசன்காலமான கி.பி. 715—777 A.D. ஆகும். இவ்வரசனையே ஆழ்வார் நந்தி பணி செய்த நகர் நந்திபுரவிண்ணகரநண்ணுமனமே' என்று குறித்திருப்பதும், அவன் அடைந்திருக்கும் வெற்றிகளைக் குறித்திருப்பதும் ஆழ்வார் இவ்வரசன்காலத்தில் இவற்றை நேரிற் கண்டவர் என்பதையும் விளக்குகின்றன. மேலும், அட்டபுயகரச்செய்யுளில் 'வணங்கும்' என்று நிகழ்காலத்திற் குறிப்பிட்டிருப்பது இக்கொள்கையை நன்கு வலியுறுத்தும்.

Y·M.C.A.
Madras E. } K. நீலமேகன்.

ஸம்ஸ்க்ருத வ்ருத்த மஞ்ஜரீ.

(சகூஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

த்ருதவிளம்பிதம். 12/22.

நநந ஞநந ஞநந ஞநஞ

கமல மாதும ருந்ததி யுந்துதி
செயவொ ணுதம டந்தையர் சந்தன
களப சீதள கொங்கையி லங்கிய

—இருபோதே.

ஸுமதி.

மத்தமயூரம். 13/22,

(கம்பன்)

(மாரீசன் ராவணனுக்குரைத்தது)

ஏதே மேகா
கர்ஜித கம்பீ
ரனிநாதெள

மாண்டார் மாண்டார்
நீயினி மாள்வார்
தொழில்செய்ய

ப்ராவ்ரிட் காலம்
மத்த மயூரா:
கதயந்தி

வேண்டா வேண்டா
செய்கெனி னுய்வான்
விதியுண்டோ.

சந்த மலர்த்தண்
கற்பக நீழல் —தலைவர்க்கும்
அந்தக னுக்கும்
அஞ்ச வடுக்கும் —அரசாள்வாய்

பங்க்தி ஸுமதி

ஞ நந ஞஞ நந ஞஞ

தூணகம். 15/23

ஞந ஞந ஞந ஞந
ஞந ஞந ஞந ஞ

தாது கொண்ட சீத மேவு
சந்து சந்த மென்ற ளிர்
போது கொண்ட டுத்த போது
பொங்கு தீம ருந்தி னூல்
ஓரா தொன்றைப்
பாரா தந்தத்
தேடே வந்திட் டுயிர்சேரா
கூறு வன்பிற்
சோரா நின்றக்
கோயா நின்றுட் —டுலையாதே.

கன்யா ஸுமதி
ஞஞ ஞஞ நந ஞஞ.

லீலா கேலம் 15/30 (15 நெடில்)

வெங்கா ளம்பா ணஞ்சேல் கண்பால்
மென்பா கஞ்சொற் குயில் மாலே.

நந=ஞ

ஆறுமாத்திரையளவுள்ளவை.

சங்கரனே சங்கரனே
சம்போகங் காதரனே
முத்தொழிலின் வினைமுதனீ
மூவர்க்கும் முழுமுதனீ
எத்தொழிலும் இறந்தோய்நீ
இறவாத தொழிலினைநீ.

ஸர்வக்ஞோ தேவானும் } நாரீ
மர்த்யானும் சாஸ்தாஸ்யாத் } (ஞஞஞ).

லோககுரும் புத்தமஹம் } ஸுமுகி
திக்கநுதே நௌமிஸதா } (ஞநநஞ)

மனஸாஹம் வசஸாஹம் } ஸுமதி
வபுஷாஹம் ஜினமிச்சே } (நநஞஞ)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், B.A., B.L.,

மதுரை.

ஸ்ரீ:

பெருந்தொகை.

[முன்னுரை]

'செந்தமிழ்'ப் பத்திரிகையின் அடுத்துவரும் பகுதிமுதலாக, பெருந்தொகை என்ற பெயரிட்டு என்னால் தொகுக்கப்பட்டுள்ள செய்யுட்டிரட்டொன்று, கிரமமாக வெளியிடப்பெற்றுவரும். அடியளவாற் குறுமையும்நெடுமையுமுடைமைநோக்கிக் குறுந்தொகை நெடுந்தொகை* என முன்னோர் தொகைநூல்கட்குப் பெயர்வழங்கியவாறுபோல, எண்ணளவாற் பெருமையுடைமைபற்றி, இந்நூற்குப் 'பெருந்தொகை' எனப் பெயர்தரலாயிற்று. இத்தொகையுட்கண்டசெய்யுள்கள் — தொல்காப்பியம் யாப்பருங்கலம் காரிகை வீரசோழியம் முதலியஇலக்கணநூல்களின் பழைய உரைகளினின்றும், முற்காலத்தவும் பிற்காலத்தவுமான இலக்கிய உரைகளினின்றும் தனிப்பாடல்களாக—ஏட்டுப்பிரதிகளாலும் பத்திரிகைகளாலும், வாய்மொழியாலுந் தெரிந்தவற்றினின்றும், சிலா தாம்ரசாஸனங்களினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்டவை. பழைய இலக்கணவிலக்கிய உரைகளில் மேற்கோளாக ஆளப்பட்ட பாடல்கள் சொற்செறிவும் பொருட்பொலிவும் பெரிதுமுடையவேனும், அந்நூல்களைக் கற்போர் அவற்றை ஆங்காங்கு உதாரணவளவிற்கொண்டுநோக்கி நெகிழவிடுவதே பெரும்பான்மை வழக்கமாயுளது. அப்பாடல்களெல்லாம், முறைப்பட அதிகாரவடைவில் வைத்துத் தனிநூலாகத் தொகுக்கப்பெறின், அஃது ஒரு சிறந்த இலக்கியமாகிப் பழம்பாடல்களின் அருமைபெருமைகளைத் தமிழ்மக்கள் அறிந்து மகிழ்தற்கு இடமாகும் என்றுகருதி, இதனைத் தொகுக்கலாயினேன். சங்கத்துச்சான்றோராற் றொகுக்கப்பட்ட நற்றிணைமுதலிய நூல்கள் இங்ஙனமே நம்மவர்க்கு இன்பம் பயப்பன என்பது தெரிந்ததே.

இத்தொகைநூல்—கடவுள்வாழ்த்து. அறவியல், பொருளியல், இன்பவியல், ஒழிபியல் என்ற ஐந்தியல்கள் கொண்டது. இதன் 'மொத்தப்' பாடற்றொகையை இப்போது வரையறுத்துக்கூறுதல் இயலாது; ஆயினும், உத்தேசம் 2000 செய்யுட்களுக்குக் குறையாதென்றேசொல்லலாம்.

* நெடுந்தொகை - அகநானூறு.

பழைய உரைகளிலே மேற்கோளாக ஆளப்படும் பாடல்களிற் பெரும்பாலவும் இப்போது அச்சேறிய நூல்களிற் காணக்கூடியனவே. இவையன்றி, உரைகாரர்காலத்துவழங்கி, இப்போது பெயர் தெரியாத நூல்களினின்று உதகரிக்கப்பட்ட செய்யுட்களும் பலவுள. இவற்றுள் வெளிவந்த நூற்பாடல்களை விடுத்து, இன்னநூலென்று தெரியாத உதாரணச் செய்யுட்களும், உரையாளர்களாற் பெயர்கூறி யாளப்பட்டு இப்போது கிடைத்தற்கரியவாயுள்ள பாரதம், தகடூர்யாத்திரை முத்தொள்ளாயிரம் ஆசிரியமாலை போன்ற நூற்பாடல்களுமே இதனுள்ளே தொகுக்கப்பட்டுள்ளன. இவையன்றிப் பேரரசர் சிற்றரசர், வள்ளல்கள், பெரியோர் முதலியவரைப்பற்றியும், தமிழ்நாட்டின் நிலைமைநிகழ்ச்சிகளைப்பற்றியும், உள்ள பழம்பாடல்களைப் பலவிடங்களினின்றுந் திரட்டி முறைப்படுத்தியுளேன். இவையாவும் தமிழறிஞர்க்கேயன்றிச் சரித்திரவாராய்ச்சி செய்வார்க்கும் பெரிதும் உதவக்கூடியன வென்பது திண்ணம்.

இங்ஙனந் தொகுக்கப்பெற்ற பழையசெய்யுட்களிலே, பொருள் செவ்வனேபுலப்படாத இடங்களுமுண்டு. வேறு ஏட்டுப்பிரதிகளின் துணையின்றி வெளிவந்த அச்சுப்பிரதிகளினின்றே திரட்டப்பெற்றமையால், உள்ளவாறே அவைபதிப்பிக்கப்படலாயின. ஒருசெய்யுளே பலவுரைகளிலும் உதகரிக்கப்பட்டவிடத்து, ஒப்புநோக்கிப் பாடபேதங்களும் உண்மையுருவமும் தெரியநேர்ந்தன. அத்தகைய பாடங்கள் கீழ்க்குறிப்பிலே நூற்பெயர் இடங்களைக் குறித்துவருமிடத்து, அவ்வப்பாட்டெண்களை யொட்டிக்காட்டப்பட்டுள்ளன. நூலிறுதியிற் பாடல்களின் விசேடக்குறிப்பும் அரும்பதவுரையும் விஷயசூசிகையும் சேர்த்து வெளியிடக் கருதியுள்ளேன்.

இந்நூல் அச்சேறிமுடிந்ததும் விவரமாக முகவுரையொன்று எழுதியமைக்கப்படும்; ஆயினும், தொடக்கத்தில் அதனைப்பற்றி முக்கியமாக அறிதற்குரியவற்றைச் செந்தமிழபிமானிகட்குத் தெரிவிக்கவிரும்பி இம்முன்னுரை எழுதலாயினேன்.

மு. இராகவையங்கார்.

ஸ்ரீ:

புரூரவசரிதை.

(௪அ௪-ஆம் பக்கத் தொடர்ச்சி)

காந்திமதிப்படலம்.

பொறுமைக்குலகமெனும்புகழானிவ்வாறிருப்பப்போற்றுரைத்
தெறுமைக்களிற்றான்றிரிகத்தன்றிண்டோள்வரைவீழ்ந்துண்டாடும்
நறுமைக்குழற்காஞ்சனமாலையென்னுமழகினாலையின்வாய்
மறுவற்றொளிருங்காந்திமதியுதித்ததுலகம்வழுத்தவே. (௧)

கூந்தற்கமுகைக்கொலைப்படுத்தியிருளைப்பகலேகுடிபோக்கி
நீந்தப்புனலிற்சைவலத்தையறலைவீழ்த்திநெறிநின்று
சாந்தப்புகையைமணந்துபுயன்மாலைசூட்டித்தழுவியவோ
காந்தட்செழும்பூந்தொடிக்கரத்துக்கன்னித்திருவின்கருங்கூந்தல். (௨)

முதலாம்பக்கத்திடைகுடபான்முளைத்தமதியங்கீழ்நோக்கி
னுதலோடொப்புச்சொல்லலாம்பகலும்விளங்குநோன்மைத்தே
யெதிராய்நின்றபாசடைகளிரண்டாய்நடுவோரிளந்தளிரும்
கதிராய்த்தோன்றுநிம்பமிவள்புருவந்திலகங்கடுக்குமால். (௩)

செய்யகமலமல......நீலம்பூத்துநுனிசிவந்துள்
ளையமில்லாக்கருஞ்சுரும்பர்நடுவணமர்ந்துபாவையடுத்
தெய்யுஞ்சிலைவேள்கணையினைவென்றிதயங்குடைந்துள்ளுயிர்பருகி
யுய்யுமருந்துதருமென்றாற்கண்ணுக்குவமையொண்ணுமால். (௪)

கொள்ளைக்கொலைவாளனையகயல்குதிப்பக்குழைவாய்க்குழைவாய்ந்த
வள்ளைக்கொடியுமுளதென்றாற்காதுக்குவமைமதிக்கலாம்
எள்ளைக்கடிந்துபொன்னிறமாயியங்குமுயிர்ப்பூரிருபாலுந்
தொள்ளைக்குமிழ்தோன்றினவெனிலுமூக்கென்றுரைக்கச்சோர்வாமால். (௫)

தெரிக்குமதுரப்பண்ணேழுங்குடிகொண்டிருந்தசெங்கனிவாய்
விரிக்குமுறுவற்றாளநகையொப்பென்றுரைக்கவேண்டுமேன்
முருக்குஞ்சிவந்தகயிரவமும்போக்கியமுதமுளையொருங்காய்க்
குருக்கும்பவளப்பாலிகையென்றுரைக்கிலதுவுங்கூடாதால். (௬)

புரளுந்திரைவாரிதியின்வலம்புரியுங்கமுகுமிவள்பசும்பொற்
றாளம்பெறலாற்சிறிதேய்க்கும்வனப்பாலுவமைசாலாதாற்
றிரளும்வடிவாய்ப்பொன்பொதிந்தவேய்நேர்தோளிமுன்கையினுக்
கிரவும்பகலும்பயில்வீணையிரங்கல்யாமொப்பலவென்றே. (௭)

உள்ளத்துறையுமன்மதனனிரதியுடனேயுண்ணறவ
வள்ளத்தினைமேற்கவிழ்த்தினவோநுழையத்தோன்றுமகுடமோ
மெள்ளக்கடவுங்கடாக்களிற்றினெடுங்கோடெழுந்தவீக்கமோ
வள்ளச்செறிகாரிருட்கூந்தலயில்வேல்விழியாட்கம்மம்மா. (௮)

குடம்போல்விம்மிப்பணைத்தமுலைக்கூர்ங்கோட்டியானைமன்மதன
னெடுந்தேரினைநின்றீர்க்கும்வகைகருங்கைநீளநீட்டியவோ
கடம்பாய்ந்தொழுகக்கறுத்ததோவல்லிகிடந்தகாட்சியோ
வடம்போலிலகுமணிவயிற்றினுரோமவொழுக்கின்வனப்பம்மா. (௯)

கிளியைக்குயிலைப்பூவைதனைத்தேனைப்பாகைக்கிடைத்தமொழிப்
பளிதத்தனத்தாளுந்திமதனமிழ்ந்தச்சுழிக்கும்பவ்வமோ
தெளியக்குலவுமின்னினுற்செய்யிற்றெரியுமெனத்தெரியா
வெளியைக்கொடியாய்ச்செய்திடையின்வைத்தான்கமலமேலோனே. (௧௦)

வாய்ந்தமடற்குட்பூங்கதலியென்னின்மணிமேகலையாதி
யேந்தியழகுபெற்றிடுமோசிலகால்வெம்மையெய்துமோ
சேந்தநிறம்வாய்ந்திடுவதுண்டோமேலேதுன்னுஞ்செயலுண்டோ
சாந்தமுலையாளுருவினுக்கதுவேயுவமைசாலுமால். (௧௧)

வேலைப்பழித்துக்கூர்ங்கணையின்விறலைமாற்றிமறலியைவென்
றாலத்தினையுள்ளருத்தியகணரிவைகணைக்காலாவமோ
கோலக்கருப்புச்சிலையினன்றென்றற்றேரிற்கொளுந்திகிரிக்
காலிற்கிடந்தவச்சென்றான்முடிமேன்மகுடங்கவலாதே. (௧௨)

மாற்றினடங்காப்பொன்னிறமாய்ச்சிறிதும்பெரிதுமாய்வளர்ந்து
தோற்றுஞ்சிரமோரைந்தாகிமென்மைதோன்றியலத்தகச்செஞ்
சேற்றினனையுங்கமடமனச்செலவும்பெறுமேற்சித்தசன்றா
னேற்றுஞ்சிலைவாணுதற்றொடிக்கையேழைசரணமேய்க்குமால். (௧௩)

இன்னதாயபேரழகின்மடந்தைதருணமெய்தினளென்
றன்னைமாருந்தோழியருமரசற்குணர்த்தவவ்வரசன்
பொன்னதாயவெழிலைமுலைப்போகந்திளைக்கும்புயமுடைய
மன்னன்யாவனெனக்கருதிமருகன்றனக்கேமணமென்ன. (௧௪)

அன்னானழகுமின்னவள்போழகுமழகுற்றிடுமென்ன
நன்னான்மறையோர்தம்மைமணவோரைநவிறிரெனநவில
வொன்னாருயிருண்டுறங்குகதிருடைவாட்படையோயின்றொழிந்த
பின்னாட்பகலேபகலென்னவுரைத்தாரந்தப்பெரியோரே. (கரு)

விரித்தமறைநூல்வல்லோர்கண்மணநாள்விதித்தவிதம்விண்ணைச்
சிரித்தநகரிலுறைவோர்களறியவுரைமின்சென்றென்னக்
குரைத்தகழற் ாலிறைபணிப்பக்கோணைக்கரடக்கடாக்களிற்றி
னெருத்தமிசையோர்பறையேற்றிக்கருமத்தலைவரியம்பினார். (கசு)

வாட்டாழ்விழியாள்காந்திமதிமணநாளையெனச்செவியிற்
கேட்டார்கேட்டார்விண்ணமுதங்கிடைத்தாரென்னமகிழ்வுற்றார்
தீட்டாவடிவத்திருமகளைத்திருந்தவளஞ்செய்பவர்போலத்
தொட்டாமலர்ப்பூங்குழலினார்நகரம்புதுக்கத்தொடங்கினார். (கஎ)

வேய்ந்துவெறுத்தநறுந்தொடையுஞ்சுமையென்றொழித்தமேகலையுந்
தோய்ந்தமகளிரூடலிடைவெறுத்தகலனுந்தோயுங்கா
லேந்துமகரத்திடைதடையென்றுதிர்த்தசாந்துமிளவெயிலிற்
காந்துமணியுங்குப்பையெனக்களைவார்தத்தங்கடைதோறும். (கஅ)

கலைகொண்மதியைவென்றமுகக்காந்திமதியைக்காணவுயர்
நிலமன்னியநாளிழிந்தனபோற்றரளவிதானநிறுத்திடுவா
ருலகையளந்தபெருங்கீர்த்தியுடையவேந்தனுயர்புகழி
னலகையளப்பதெனநெடியகொடிகணிரைப்பாரளவில்லோர். (க௯)

மன்னன்மகட்குமணநாளைமறுநாட்டரசரனைவோரு
மின்னநகரின்மேவுவர்நம்மேவங்கேட்பரினியென்ன
வன்னமனையார்சிலவுறுப்பினழகுகவர்ந்ததிதுவென்னக்
கன்னலெழிற்பூங்கதலிநெடுந்தூண்கடோறுங்கட்டுவார். (உ௰)

தூபமிடுவார்சாந்தநறுஞ்சுண்ணந்தூவுவார்தூண்டாத்
தீபமிடுவார்நிறைகுடங்கணிரைப்பார்முளைப்பாலிகைசேர்ப்பா
ரோவமெழுதுவார்தூண்களுறைகள்பொதிவாரொண்டரளத்
தாமமலர்கணாற்றுவார்பொற்றோரணங்களைச்செய்வார். (உக)

ஆறுகரணத்தைதந்தினையுள்ளடக்கிநான்குமறைவழியே
யேறுதழன்மூன்றியற்றுமிருபிறப்போர்க்கொருமையுடனீவார்
கூறுமிசையேழ்பாடியெட்டுவகைமங்கலங்கள்குயிற்றுவா
ரூறுமிசைகளொன்பதொடுநடிப்பார்திசைபத்துவப்பாக. (உஉ)

வேறு.

கன்னிநகரின்னனகளிப்பொடுகெழிப்ப
மன்னவன்மகட்குமணமண்டபமமைத்தான்
பொன்னினகரன்னதுபுலன்புலனைவென்ற
வன்னவர்மனத்தினுமகன்றுளதுயர்ந்தே. (உ௩)

அப்புதியமாடநடுவவ்வரசனெய்திச்
செப்பிவிடுமோலைவழிமன்னவர்செறிந்தார்
விப்பிரர்கள்வேதமுனிவோர்களுமிடைந்தார்
மைப்படுகுழற்றிருமணத்திறனுணர்ந்தே. (உ௪)

அங்கணிலமன்னவருங்கடனியற்றித்
தங்கண்மனைநேர்விடுதிதோறுமவர்சாரக்
கொங்குவிரிதாரிறைகுலக்கொடியினோடு
மங்குறுடுகோயிலின்வதிந்தனன்மகிழ்ந்தே. (உ௫)

அவ்வரசனவ்வழியமர்ந்தனனிருப்ப
மைவளர்விழிச்சியொருமந்திரநினைந்தாள்
கைவளர்கிளிக்கனிமொழிக்கதிர்முலைப்பூண்
டெய்வமகளைத்தன்மருகற்குதவிசெய்வான். (உ௬)

இத்திருவையிம்மருகனெய்திடிலிவ்வேந்தன்
மெய்த்திருவனைத்தினையுமேவறிடனன்றே
வத்திருவையெள்ளலறிவன்றெனவலார்பூண்
கொத்திருமலர்க்குழலியுள்ளமகிழ்கொண்டாள். (உ௭)

அன்னநடையின்னமுதமன்னவளுமன்ன
மன்னவனுமின்னணம்வதிந்திடுமம்மாலை
பொன்னினகரும்பரயன்மால்சசிபுணர்ந்தோன்
உன்னரியவூழிமுதல்வன்சபையிலுற்றார். (உ௮)

காந்திமதிப்படலம் முற்றும்.

உதவிப்பத்திராதிபர்.

உ

பல்லவர்கோயில்கள்.

(செந்தமிழ் ௨௰-ம் தொகுதியின் ௬௦௦-ம் பக்கத்தொடர்ச்சி)

V. இராஜஸிம்ஹன் காலத்தியவடிவு.

விழுப்புரம் தாலூகா பனமலைக்கிராமத்திலுள்ள குகைக்கோயில்(1) ஒற்றை ஸம்ஸ்கிருத சுலோகத்தாலாகிய வொருசாஸனம் (2) இருக்கிறது. அச்சுலோகம் காஞ்சீபுரம் கைலாஸநாதஸ்வாமிகோயிலில் உள்ள முக்கியமான கல்வெட்டின் கடைசிச்செய்யுளைப் பெரிதும் ஒத்திருக்கின்றது. இப்பனமலைச்சாஸனத்தின் புகைப்படம் ஒன்று வானூர் இராகவேந்திராசார்யரால் டாக்டர் ஹுல்ஷுக்கு அனுப்பப்பட்டது. அச்சுலோகத்தின் மொழிபெயர்ப்பிலிருந்து, டாக்டர் ஹுல்ஷு அக்குகை காஞ்சீபுரம் கைலாஸநாதர்கோயிலைக் கட்டிய இராஜஸிம்ஹன் என்னும் அரசனால் செதுக்கப்பட்டது என்னும் முடிவிற்கு வந்துவிட்டார்.

அக்குகையின் புகைப்படம் ஒன்று எடுப்பதற்காகவும், அதில் இராஜஸிம்ஹன் சாஸனம் ஒன்று இருப்பதால், அவன்காலத்தில் வெட்டப்பட்டுள்ள கோயிலின்வடிவத்தை அறிவதற்காகவும் நான் 1915ஆு ஜனவரிமீ முதல்தேதி பனமலைக்குச் சென்றேன்.

அங்குச் சென்றதும் மேலேசொன்ன சாஸனத்தைப் பார்த்தேன். அது பாறையிற் குடையப்பட்டகோயிலிற் பொறிக்கப்படவில்லை. ஆனால் அது ஒரு காளி (மஹிஷாஸுரமர்த்தனி) யின் சிலையையுடைய ஒரு வளைந்தவழியின்கண் செதுக்கப்பட்டிருக்கிறது.

---

1. List of Antiquities in the Madras Presidency by Swell Vol I page. 209 and Madras District Gazetteers. South Arcot by Francis (1906) p. 385.

2, South Indian Inscriptions. Vol I. No. 31. page 24.

இச்சிறிய குடைவரைக்கோயில் ஒரு பாறையின் அடியில் அமைக்கப்பட்டிருக்கிறது. அப்பாறையின் உச்சியிலும் ஒருகோயில் இருக்கிறது. நான் அதையும் போய்ப் பார்த்தேன். அதனெதிரிற்போய் நின்றவுடன், நான்,

1. அக்கோயில், காஞ்சீபுரம் கைலாஸநாதர்கோயிலைப்போலவே கட்டப்பட்டிருக்கிறது.

2. அக்கோயிலினடியில் அதைச்சுற்றிக் கிரந்த - பல்லவ எழுத்தால் ஒற்றைவரிச்சாஸனம் ஒன்றிருக்கின்றது.

என இரண்டு தீர்மானங்களைச் செய்துகொண்டேன்.

இச்சாஸனம் இதுவரையில் ஓரிடத்திலாவது கூறப்படவில்லை. நான் இதைப்பற்றி மகா-ள-ள-ஸ்ரீ H. கிருஷ்ணசாஸ்திரிகளுக்குத் தெரிவித்தேன். அவர்,

"நீங்கள் 20உ அனுப்பியகடிதத்துடன் அனுப்பிய பனமலைப் பல்லவ சாஸனத்தைப்பற்றிய அச்சுக்குறிப்பை ஏற்றுக்கொள்வதுடன், நான் உங்களுக்கு இது ஒரு புதியசாஸனமென்பதை அறிவிக்கிறேன். இது, இதுவரையில் பிரசுரிக்கப்படாததோடு ஒருவராலும் கண்டுபிடிக்கப்படவுமில்லை."

என 1915ஞு ஆகஸ்டு மீ 28உ பதில் எழுதினர்.

காஞ்சீபுரம் கைலாஸநாதர்கோயில் கட்டப்பட்டிருக்கும் மாதிரியை ஒத்ததும், ஒருசாஸனத்தையுடையதுமான ஒருகோயிலைக் கண்டுபிடித்தது பல்லவசிற்ப சரித்திரத்திற்கு ஒரு முக்கிய சாதனமாகும். ஆகையால் நாம்,

1. சாஸனத்தின் நடை.
2. கோயில் கட்டப்பட்டிருக்கும் வடிவு.
3. சாஸனத்து எழுத்துக்களின் வடிவு.

ஆகிய இவைகளைப்பற்றி ஆராய்வோம்.

1. சாஸனத்தின் நடை.

அச்சாஸனத்தின் ஆதியும் முடிவும் கோயிலுக்கு முன்பக்கமாகக் கட்டப்பட்டுள்ள செங்கற்கட்டிடத்தால் மறைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் முதல் அடியின் ஒருபாகமும், கடைசிப்பாகமுழுவதும் காணப்படவில்லை. மத்தியில், சிலஎழுத்துக்களையுடைய ஒருகல் மட்டும் எடுக்கப்பட்டிருப்பதைத்தவிர அச்சாஸனத்தின் எழுத்துக்கள் ஜாக்கிரதையாகவும் (3) நன்றாகவும் காப்பாற்றப்பட்டிருக்கின்றன.

பனமலைச்சாஸனம் காஞ்சீபுரம் கைலாஸநாதர்கோயிலிலுள்ள விமானத்தின் அடியிற் பொறிக்கப்பட்டுள்ள சாஸனத்தைப் பெரிதும் ஒத்திருக்கின்றது.(4) இரண்டு சாஸனங்களும் அவ்வமிசத்தை ஏற்படுத்திய பல்லவன் வமிசாவளியுடன் ஆரம்பிக்கின்றன.

பிறகு பல்லவ அரசர்களது வீரப்பிரதாபங்களது வரிசையொன்று இருக்கின்றது. கடைசியில், பரமேச்வரன் எப்படி குகனை அடைந்தானோ அதேவிதமாக அடையப்பட்ட இராஜஸிம்ஹன் என்னும் ஓர் அரசன் அவ்வமிசத்திற் பிறந்தான் எனக் கூறப்பட்டிருக்கிறது.

இது ஒரு சாதாரண உவமானமட்டுமல்ல. அதாவது, இராஜஸிம்ஹன் என்பவன் பரமேச்வரன் என்னும் பெயரையுடைய ஒரு அரசன் புதல்வன் என்பதை நிச்சயமாகத் தெரிவிக்கின்றது.

அப்பால் இராஜஸிம்ஹனது வீரப்பிரதாபங்களைக் கூறுகின்றன. இரண்டுசாஸனங்களிலும் இராஜஸிம்ஹன் யானைகளை ஜெயித்தவொரு சிங்கத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கின்றான். அந்தயானைகள் இவனது விரோதிகளாகிய அரசர்களைக் குறிக்கின்றன. இராஜஸிம்ஹன் 'சிங்கங்களுக்கு அதிபன்' எனவுங் கூறப்பட்டிருக்கின்றான்.

நமக்குக் கட்டிடங்களில் உள்ள சாஸனங்களின் உதவியால் அவை கட்டப்பட்டகாலத்தை நிர்ணயிக்கத் தடையாயிருப்பது யாதெனில்

3. சிலாசாஸன பரிசோதகர்கள் அக்கல்லை மீட்டும் கண்டுபிடித்துவிட்டனர். இச்சாஸனம் மிகத்தெளிவாகத் திருவனந்தபுரம் K. G. சங்கரையர் அவர்களாற் படிக்கப்பட்டுப் பங்களூரில் Quarterly Journal of the Mythic Society யிலும், Indian Antiquary லும் பதிப்பிக்கப்பெற்றிருக்கின்றது.

4. South Indian Inscriptions Vol I p. 12. No. 24

அநேக பல்லவ அரசர்கள் ஒரே பெயர்மட்டுமெல்லாமல் ஒரேபட்டங்களேயுமுடையராயிருப்பதே;ஆதலால் அப்பட்டங்களேக்கொண்டு நம்மால்அவை எந்த அரசனேக் குறிக்கின்றனவென அறியமுடியவில்லே.

ஆனுல், இங்கு அப்படிச் சந்தேகப்படவேண்டிய இடமொன்றுமில்லே; ஏனென்ருல், பல்லவர்களில் இராஜஸிம்ஹன் என்னும்விருதையுடையவன் நரஸிம்ஹவர்மன் II ஒருவன்தான். வாயலூர் வியாக்ரபுரீசுவரர் கோயில் தூணிலுள்ள சாஸனத்தில்(5) இராஜஸிம்ஹன் என்னும் விருதையுடைய அரசனின்(6) வமிசாவளிமுழுவது மிருக்கின்றது.

நரஸிம்ஹவர்மன் II முதலாம் பரமேச்வரவர்மனின் புதல்வனுவன். பனமலேச்சாஸனம், இவனுடையபிறப்பைக் குகனது பிறப்பிற்கு ஒப்பிடும்போது, ஒருவன பரமேச்வரன் என்னும் கடவுளின் புதல்வன் என்றும் மற்றவன் அதே பெயருள்ள ஒருஅரசனின் புதல்வன் என்றும் தெளிவாகக் கூறுகின்றது.

வேலூர்பாளேயம் ஏடுகளின் நடையைப்பற்றிய| அறிக்கையில் (7) மகா ா-ா ஸ்ரீ H. கிருஷ்ணசாஸ்திரிகள்,

"இவ்விதமாகச் சொல்லிவரும்போது இங்கே கவனிக்கத்தக்க விஷயம் ஒன்று உளது. அதாவது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பல்லவவமிசாவளியிற் கூறியபடி முதலாம் நரஸிம்ஹவர்மனுக்குப் பிறகு இரண்டாம் மஹேந்திரவர்மனேக் கூறவில்லே. தவிர, முதலாம் பரமேச்வரவர்மனுக்கும் இரண்டாம் நரஸிம்ஹவர்மனுக்கும் மத்தியில் ஒரு அநாமதேய அரசனேக்கூறி நரஸிம்ஹவர்மனே முதலாம் பரமேச்வரன் பெயரனுக (பிள்ளேயின்பிள்ளேயாக)ச் செய்திருக்கின்றது."

என எழுதியிருக்கிருர். அவர் அப்படிக்கூறியதற்குக்காரணம் 'வேலூர் பாளேயம் ஏடுகளே எழுதியவற்கு, தான் எழுதியதிற்கு ஒரு நூற்றுண்டுக்கு மேற்பட்ட காலத்திற்குமுன்பு ஆண்ட அரசர்களின்முறை நன்ருகத்தெரியாது' என்பதேயாம்.

---

5. G.O. No. 538. 28th July 1909. p. 41. No. 368.
6. Do. p. 78.
7. G. O. No. 832 28th July 1911. Part II. p. 61. Published in the South Indian Inscriptions Vol. II.

வேலூர் பாளையம் ஏடுகளிற் "சிவனுக்குக் கைலாஸத்தைப்போலப் பாறைகளால் ஒரு கோயில் கட்டுவித்தான்" எனக்கூறப்பட்டிருப்பதால், காஞ்சீபுரத்திற் கைலாஸநாதர் கோயில் கட்டியது நரஸிம்ஹவர்மன் II காலத்தில் நடந்த ஒருமுக்கியமானசெய்தியாகத்தான் கருதப்பட்டு வந்தது. இதனுடன் காசாக்குடி (8) உதயேந்திரம்(9) வேலூர்பாளையம்(10) ஏடுகளிற் கூறியதிலிருந்து இவ்வரசன் சிவனையலங்கரிப்பதும் பிராமணர்களுக்கு யதேஷ்டமாகத் தானம்செய்வதும் கோயில்கள்கட்டுவதுந் தவிர வேறொன்றும் செய்ததாகத் தெரியவில்லை.

இவ்வரசன், பரமேச்வரன் I முதலாம்விக்கிரமாதித்தனை வென்றதற்கும் (கி.பி. 655–680) விக்கிரமாதித்தன் II நந்திவர்மன் பல்லவமல்லனை ஜெயித்ததிற்கும் (740) இடைப்பட்டகாலத்து ஆண்டான் என்பது அறிந்தவிஷயமே. ஆகையால் பனமலைக்கோயிலும் காஞ்சீபுரம் கைலாஸநாதர்கோயிலும், எட்டாம் நூற்றாண்டின் முதலில் (700–710) ராஜஸிம்ஹனுற் கட்டப்பட்டிருக்கின்றன எனக் கூறவேண்டியிருக்கிறது.

2 கோயில் கட்டப்பட்டிருக்கும் வடிவு.

காஞ்சீபுரம் கைலாஸநாதர்கோயில் கட்டப்பட்டுள்ளமாதிரியைப் பற்றி நாம் இங்கு அதிகமாக எழுதவில்லை. அது, அலெக்ஸாண்டர் ரே (Alexander Rea) எழுதிய 'பல்லவர்சிற்பம்' (Pallava Architecture) என்னும் புத்தகத்திலும், என்னுல் எழுதப்பட்ட 'தென்னிந்திய சிற்பசாஸ்திர ஆராய்ச்சி' (Archeologic du Sud de l' Inde. Tome I Architective. pp. 103-111) என்னும் ப்ரெஞ்சு புத்தகத்திலும் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. நாம் இங்குப் பனமலைக்கோயிலைமட்டும் விவரித்துக்கூறுவோம்.

1. அக்கோயிலின் நிலப்படம் ( ) மற்றஇடங்களிற் காணப்படாததும், காஞ்சீபுரம் கைலாஸநாதர்கோயிலிற்காணப்படுவதுமான

8. South Indian Inscriptions Vol. II p. 342.
9. South Indian Inscriptions Vol. III p. 371.
10. G. O. No. 832 28th July 1911 Part II p. 61 and South Indian Inscriptions Vol. II Part V.

ஒரு அதிசயத்தைத் தெரிவிக்கின்றது. கர்ப்பக்கிருஹத்தின் நான்கு பக்கங்களிலும் அதையொட்டிய அறைகள் காணப்படுகின்றன. அவை கிழக்கு அல்லது மேற்குமுகமாகவேதான் இருக்கின்றன. (அவை ஒருபொழுதும் தெற்கு அல்லது வடக்குமுகமாக இருப்பதில்லை.) அம் மாடங்களில் லிங்கங்கள் இருக்கின்றன.

2- பனமலையிலுள்ள லிங்கங்களும் காஞ்சீபுரம்கோயில் லிங்கங்களும் மற்ற லிங்கங்களைப்போல இல்லை. மற்ற லிங்கங்கள் எல்லாம் உருண்டைவடிவினதாகவிருக்க இவைமட்டும் எட்டு அல்லது பதினறு பட்டைகளையுடைய ஸ்படிகலிங்கங்களாக இருக்கின்றன. அநேகமாக இம்முகங்களெல்லாம் சிறிது வட்டமாகத்தான் இருக்கின்றன.

3. இந்துக்களதுகோயில்களின் கர்ப்பக்கிருகத்தினுட்புறம் ஒரு பொழுதும் அலங்கரிக்கப்படுவதில்லை. ஆனல் பனமலையிலும், காஞ்சீபுரத்திலும் கர்ப்பக்கிருகத்தின பின்மதிலில் ஸோமாஸ்கந்தரைப்போன்ற விக்கிரகம் விளங்குகின்றது. சிவனுக்கு இருபுறங்களிலும் ஆனல், சற்றுப் பின்னல், பிரும்மாவும் விஷ்ணுவும் நிற்கின்றனர்கள்.

4. பின்கால்களில் நிற்கும் சிங்கங்கள் கட்டடங்களின் மூலைகளிலுள்ள தூண்களைத் தாங்கிநிற்பதைப் பார்க்கின்றோம். பனமலையிலும், காஞ்சீபுரத்திலும் இவை பெரியனவாகவும் தற்காலக்கோயில்களிற் காணப்படும் சிங்கங்களைப்போலல்லாமலும் இருக்கின்றன. பனமலையை விட இவை கைலாஸநாதர்கோயிலில் அதிகமாகக் காணப்படுகின்றன.

5. பனமலைக்கோயிலின் சுவர்கள் மாடங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. அவை, காஞ்சீபுரம் கைலாஸநாதர்கோயிலில் அதிகமாகக் காணப்படும் சித்திரவேலையுடன் இருக்கின்றன.

பனமலையிலுள்ள 'திருவாட்சி' இரண்டு மகரங்களின் வாயிலிருந்து புறப்படும் ஒற்றைவளைவாலாகியது. மஹேந்திரன்காலத்ததைப்போல் இரண்டுவளைவும் நடுவில் ஒரு மேடையும் இல்லாமல் இருத்தலால் இதற்கு 'ஒற்றைத் திருவாட்சி' எனப் பெயர்.

6. கடைசியாகக் காஞ்சீபுரம்கோயிலும் பனமலைக்கோயிலும் ஒரே பாறையால் ஆனவையல்ல. ஆனால், பாறைகளை ஒன்றன்மேல் ஒன்றாக வைத்துக்கட்டப்பட்ட வகுப்பைச்சேர்ந்தன எனக் கூறிமுடிப்போம்.

3. சாஸன எழுத்துக்கள்.

நாம் சாஸனநடையாலும், கோயில்கட்டப்பட்டுள்ள வடிவாலும் காஞ்சீபுரம் கைலாஸநாதர்கோயிலும் பனமலைக்கோயிலும் ஒரேகாலத்தனவென ஆராய்ந்தோம். ஆனால் இரண்டு சாஸனங்களின் எழுத்துக்களையும் ஆராய்ந்துபார்த்தால் அவை சமகாலத்தனவல்ல எனச் சுலபமாகக் கூறிவிடுவார்கள்.

அவற்றை நன்றாக ஆராய்ந்துபார்த்தால் அவை இரண்டுவிதங்களில் மாறுபடுவது காணப்படும்.

1. காஞ்சீபுர சாஸன எழுத்துக்கள் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. நேர்கோடுகள் இருக்கவேண்டிய இடங்களில் வளைந்தகோடுகள் காணப்படுகின்றன. பனமலைச் சாஸன எழுத்துக்கள் சாதாரணமாக இருக்கின்றன.

2. சாஸனங்களின் எழுத்துக்களும் ஒரேமாதிரியாக வளர்ந்து வந்ததாகக் காணப்படவில்லை. காஞ்சீபுரம் எழுத்துக்கள் சுமார் ஐம்பது வருஷம் பழமையுடையனவாகத் தோன்றுகின்றன. அவற்றிலும், ம, ஜ, ண, ந, ஸ, வ, ய, ல, முதலிய எழுத்துக்கள் மிகப்புராதனமாகத் தோன்றுகின்றன.

இரண்டுசாஸனங்களும் சமகாலத்தனவல்லவென்பது முடிபு அல்ல ஆதலின், நாம் ஒருசாஸனம் மற்றொன்றைவிடப் புராதனமானது என நிர்ணயிக்க அவற்றின் எழுத்துக்களின் வடிவம் மட்டும் போதாது என ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது. ஆயினும், இதுவரை அப்படித்தான் செய்துவந்திருக்கிறார்கள்.

நாம் மேலேகூறிய காஞ்சீபுரச்சாஸனம் கைலாஸநாதர்கோயிலில் இராஜஸிம்ஹேச்வரர் கர்ப்பக்கிருகத்தின் அடியிற் பொறிக்கப்பட்டுள்ள

தாகும். அது 'தென்னிந்திய சிலாசாஸனங்களில்(11) மொழிபெயர்த்து வெளியிடப்பட்டிருக்கின்றது.

அதே கோயிலில், பிராகாரத்தைச்சுற்றி, கர்ப்பக்கிருகத்தின் கீழ் பாகத்தில் இன்னும் சாஸனங்க ளிருக்கின்றன.

அச்சாஸனங்கள் நான்குவரிசையாக எழுதப்பட்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொருவித எழுத்தால் எழுதப்பட்டிருக்கின்றன. அதிலும். இரண்டாவதுவரிசை பனமலையில் உள்ள எழுத்தாலேயே எழுதப்பட்டுள்ளது. மூன்றாவதுவரிசை மேலேசொல்லப்பட்ட இராஜஸிம்ஹேச்வரர்கோயிலடியிலெழுதப்பட்டுள்ள எழுத்தாலேயே(12) பொறிக்கப்பட்டுள்ளது. ஆகையால் இவ்விரண்டுவரிசையும் ஸமகாலத்தனவென்பது நிச்சயம். ஆனால், டாக்டர் ஹூல்ஷ் எழுத்துக்களின் வடிவையே ஆதாரமாகக்கொண்டு மூன்றாவதுவரிசை இராஜஸிம்ஹன் காலத்தில் எழுதப்பட்டதென்றும், இரண்டாம்வரிசை இராஜஸிம்ஹனுக்குப்பின்னால் வந்த அரசராற் செய்யப்பட்ட பிரதியாக இருத்தல் வேண்டும் என்றும் கூறுகிறார்.

"மூன்றாவதுவரிசை, இராஜஸிம்ஹேச்வராலயத்தைச்சுற்றி இருக்கும் சாஸனம் எழுதப்பட்ட எழுத்துக்களாலேயே எழுதப்பட்டிருக்கின்றது. ஆகவே, அது அக்கோயிலைக்கட்டிய இராஜஸிம்ஹன்காலத்தைச் சேர்ந்தது. இவ்விதமாக, முதல்வரிசையும் இரண்டாவதுவரிசையும் இராஜஸிம்ஹனுக்குப் பின்னால்வந்த அரசர்களில் எவராலாவது பொறிப்பிக்கப்பட்டனவாகவும் மூன்றாம்வரிசையின் பிரதியாகவும் இருத்தல்வேண்டும்".(13)

நாம் இதுவரையில் முதல்வரிசையும் நான்காம் வரிசையும் எழுதப்பட்டிருப்பதைப்பற்றி ஒன்றுமே கூறவில்லை. அவை மேலே கூறப்பட்ட எழுத்துக்களாலேயே எழுதப்படவில்லை. மேலேகூறியன "நாகரி" எழுத்துக்களாலும் இவை "கிரந்த" எழுத்துக்களாலும் எழுதப்பட்டிருக்கின்றன. "நாகரி" வேறுதேசத்து எழுத்துக்களே. முதல்வரிசையும் நான்காவது வரிசையும் எக்காலத்தில் எழுதப்பட்டன? இரண்டா

11. South Indian Inscriptions. Vol. 1 p. 12.
12. South Indian Inscriptions. No. 24.
13. S. I. I. Vol. I p. 16.

வது வரிசையும் மூன்றாவதுவரிசையும் எப்படி ஒரேகாலத்தனவோ அப்படியே இவையும் ஒரேகாலத்தனவாயிருத்தல்வேண்டும். அதாவது அந்த நான்கு வரிசைகளும் இராஜஸிம்ஹனால் அக்கோயில் கட்டப்பட்டகாலத்திலேயே பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இது டாக்டர் ஹூல்ஷ் கூறுவதற்கு மாறாக இருக்கின்றது. "இரண்டுவிதமான எழுத்துக்களால் எழுதப்பட்டசாஸனங்களை விக்கிரமாதித்தன் (கி. பி. 733–34 முதல் 746-47) பல்லவர்மேல் அடைந்த வெற்றிக்கு முன்பாக வைக்கலாம்." (14)

ஆகவே டாக்டர் ஹூல்ஷ் இச்சாஸனங்கள் ஸமகாலத்தனவல்ல என்னும் எண்ணமுடையவராக இருக்கின்றார்: வளைவுகோட்டால் எழுதப்பட்டதே இராஜஸிம்ஹன்காலத்தைச் சேர்ந்ததென்றும், மற்றவை அவனுக்குப்பின்னால் வந்த இரண்டாம் பரமேசுரன் நந்திவர்மன் பல்லவமல்லன் முதலியவர்கள் காலத்தைச் சேர்ந்தனவென்றும் தெரிகிறது என்று கூறுகிறார். பனமலைக்கோயிற்சாஸனத்தைக் கண்டுபிடித்தது, மேலே கூறியதற்கு மாறாக இராஜஸிம்ஹன்காலத்திற் பலவித எழுத்துக்கள் வழங்கிவந்தன என்பதையும், எழுத்துக்களின் மாறுதல்களால் உண்டாகும் வித்தியாசம் நிச்சயமாகக் காலமாறுபாட்டைக் குறிக்கவில்லை என்பதையும் உறுதிப்படுத்தியது.

இங்ஙனம் இரண்டாம் நரஸிம்ஹவர்மன் எனப்படும் இராஜஸிம்ஹன்காலத்திற் கற்பாறைகளிற் பொறிக்கப்படும் சாஸனங்களுக்கு மூன்றுவித ஸம்ஸ்கிருத எழுத்துக்கள் வழங்கிவந்தன என்பது போதரும்.

1. சாதாரண க்ரந்தபல்லவ எழுத்து:— (பனமலை எழுத்து) இது செப்பேடுகளில் எழுதுவதற்கு உபயோகப்படும் எழுத்துக்களை மிகவும் ஒத்திருப்பது (கூரம் காசாக்குடிச்செப்பேடுகள்.)

2. முன்னதைவிடப் புராதனமான அலங்கார கிரந்தபல்லவ எழுத்து." இவ்வகை இராஜஸிம்ஹனுக்குமுந்தியோரால் ஐம்பதுவருஷங்களுக்குமுன்பே உற்பத்தி செய்யப்பட்டன. இது அதிகமாகச்சித்தி

14, Epigraphia Indica. Vol X No. 1. p. 3.

ரிக்கப் பட்டிருந்ததால் அதிகமாக உபயோகப்படவில்லை. ஆகவே மாறுதல் உண்டாகாமற் பிறந்தமேனியாகவே இருந்தது. அதனுற்றான் இவ்வெழுத்துக்களை உபயோகிக்க எண்ணங்கொண்ட இராஜஸிம்ஹன் காலத்துச்சிற்பிகள் அவன்காலத்து நாகரிகப்படி எழுத்துக்களை அலங்கரிக்காமல் இதேஎழுத்துக்களை இவ்விதமாகவே அலங்கரித்தார்கள்.

3. நாகரி-பல்லவ எழுத்துக்கள் இவை அநேகமாக வடபாகத்திற்றான் உபயோகப்பட்டுவந்தன. இவ்விதமாகப் பனமலைக்கோயிலைக் கண்டுபிடித்தது சரித்திர உலகத்திற்கு அநேகவிஷயங்களை நிர்ணயித்ததுடன் இராஜஸிம்ஹன்காலத்திற் கோயில்கள் கட்டப்பட்டிருந்தவடிவையும் உறுதிப்படுத்தியது.

1. நிலப்படம்:— கர்ப்பக்கிருகத்தைச்சுற்றிப் பல அறைகள் கிழக்குநோக்கியாவது மேற்குநோக்கியாவது இருக்கும். அவற்றிலும் லிங்கங்கள் காணப்படும்.

2. லிங்கங்கள்:— இந்த லிங்கங்கள் பூராவாக எட்டு அல்லது பதினுறுபோன்ற முகங்களையுடைய பட்டைலிங்கங்கள். ஒருபொழுதும் உருண்டைலிங்கமில்லை.

3. ஸோமாஸ்கந்தர்:— கர்ப்பக்கிருகத்தின் பின்சுவர் அக்காலத்திற்கு உரிய ஸோமாஸ்கந்தவிக்கிரகத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

4. பின்னங்கால்களில்நிற்கும் சிங்கங்கள் வேண்டிய அளவு காணப்படுகின்றன.

5. மாடங்களின்பேரில் உள்ள 'ஒற்றைத்திருவாட்சி' என்னும் தோரணம் உண்டு.

6. கடைசியாக அக்கோயில்கள் எல்லாம் ஒன்றின்மேல் ஒன்றுகக் கற்களை அடுக்கிக்கட்டப்பட்ட கோயில்களேயாம்.

(தொடரும்.)

கி. நா. சுப்பிரமணியம்.

உ

பலகவித்திரட்டு.

———:(o):———

தருமபுரவாதீனத்திலும், திருவாவடுதுறையாதீனத்திலுமுள்ள சந்நிதானங்கள் தினமும் பூசைமுடிந்தபின்பு ஒடுக்கத்திற்குவந்து திருமுறைகளைப் பூசித்தொருதிருப்பாட்டாயினும் வாசித்துச்சிவதலங்களிலிருந்து வந்திருக்கும் விபூதியெல்லாஞ்சேர்த்துவைத்திருக்கிறபையை விரித்து விபூதியெடுத்துத்தரித்துக்கொண்டு பின் நமஸ்காரம்பண்ணுகிற எல்லாவடியார்களுக்கும் அவ்விபூதியெடுத்துக்கொடுக்கும்போது பின்வருங்குருதோத்திரக்கவிகளை பொருளுதுவாமூர்த்திகூறுவதுண்டு.

அருண்ஞானப்பிரகாசகுருஞானசம்பந்தரானந்தபரவசஞ்செ
யருள்சச்சிதானந்தர்மாசிலாமணிமூர்த்தியணிஞானசம்பந்தராந்

திருஞானசம்பந்தர்திருவம்பலக்குரவர்சின்மயத்திருமேனியாய்த்
திகழுமழகியதிருச்சிற்றம்பலக்குரவர்திருநாவுக்கரசகுரவர்

தருமைநகர்மேவுசிவஞானதேசிகராசர்சச்சிதானந்தகுரவர்
தாழ்விலாமுத்துக்குமாரதேசிகருண்மைதருஞானசம்பந்தராங்

கருதரியவாழ்வுதருகந்தப்பதேசிகர்கவின்மாசிலாமணியெனுங்
கத்தாருள்சச்சிதானந்தகுருமாணிக்கவாசகர்கழல்பணிகுவாம்.

திருநந்திகுருசனற்குமரர்சத்தியஞானதெரிசனிபரஞ்சோதியார்
திகழுமெய்கண்டாருணந்திமறைஞானசம்பந்தருமாபதிதேசிக

ரருணமச்சிவாயர்சித்தர்சிவப்பிரகாசரணிதுறைசைநமசிவாய
ராரணம்பரவுமறைஞானரம்பலவாணரவிருத்திரகோடியார்

பொருவில்வேலப்பரிருகுமாரசாமிக்குரவர்புகழ்மாசிலாமணிபர்தம்
புதல்வரெனவருராமலிங்கரிருவேலப்பபோதரெமையாளவேண்டி

வருதிருச்சிற்றம்பலக்குரவரம்பலவாணகுருசுப்பிரமண்ய
வாதரம்பலவாணகுருசுப்பரமணியகுருமருமலர்த்தாள்கள்போற்றி.

சேற்றூர்ச் சமஸ்தானபதியாகிய சேவகப்பாண்டியத்துரைத்தேவர் ஆடிமதியில் எல்லாரும் வந்து சந்திக்கும்போது காட்சி கொடுப்ப

துண்டு. அப்போது சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர் கூறியகவி. இப்படி வருடந்தோறுங் கூறுங்கவிக்குச் சந்திப்புக்கவி யென்று அங்குக்கூறும் வழக்கமுண்டு.

ஒருவனுளனுடைநாதனருளாலெந்தாதையினுமுபர்ச்சிதோன்ற
வருமோரைவகைப்பயந்தீர்த்தெங்காளுங்காத்துமினிமருகலீரென்
றருள்விளங்கவேவிளம்பியாடிமதியிற்காட்சியருளினனெங்
திருவன்வணங்காமுடியன்சேவகப்பாண்டியராசசிங்கந்தானே.

ஐவகைப்பயமாவன — தன்னாற்றன்பரிசனத்தாற்பகைத்திறத்தாற் கள்வராலுயிர்தம்மாலானபயமைந்தாம்.

திருவாவடுதுறை யாதீனத்தில், நமசிவாய மூர்த்தி குருபூசைத் தினத்திற் சீடர்களெல்லாம்வரும்படி குருபூசைத்திருமுகத்தை ஒருசுப தினத்திற் சபாபதிசந்நிதியிலிருந் தெழுதுவது வழக்கம். இது வருடந்தோறுமுண்டு அப்போது ஷை கவிராயர் கூறிய கவி.

தெரிவரியபுகழ்த்துறைசைக்குருமணியம்பலவாணதேசிகன்றன்
குருபூசைத்திருமுகத்திலைமுகமையிருகரங்கள்கொண்டிருந்தே
யரியபலதுறைசேர்கோவைப்பதங்கள்வரைந்தருளுமதனாலென்றும்
பெரியஞானியரகத்தேயறிபொருளாய்விளங்குசிவபெருமான்றானே.

இது, சிவபிரானுக்கும் அம்பலவாணதேசிகர்க்குஞ் சிலேடையாகக் கூறியது. சிவபிரானைக்குறிக்கும்போது ஐமுகம்— அஞ்சுமுகம், ஐயிரு கரம்—பத்துக்கரம், பலதுறைசேர் கோவைப்பதம்—காட்சிமுதலாகப்பல துறைகள்பொருந்துகின்ற திருக்கோவையாரிலுள்ள சொற்கள் என்றும், மகாசந்நிதானத்தைக்குறிக்கும்போது அழகியமுகம், அழகிய விரண்டு கரம். பலவிடங்களுஞ்சேரத்தக்க ஒழுங்காகியசொற்கள் என்றும் பொருள் கொள்க.

இஃதோர்வருடத்திற்கூறியது.

திருநமசிவாயகுருவெனவரும்மம்பலவாணதேசிகன்றன்
குருபூசைகண்டுயர்வாழ்வுறவடியாரேவரையுங்கூடும்வண்ண
மருவியநல்லோரையினிலெண்ணிறந்ததிருமுகத்தைவரைதல்செய்தா
னொருசோற்கெழுதுதிருமுகமோவித்திருமுகமோர்வுயர்வேதாமே.

எண்ணிறந்த திருமுகமென்றதனால் சேரற்கருளியது ஒருதிருமுகமென்றும், அடியாரேவரையும் என்றதனால் ஒருசேரற்கு என்றும், வாழ்வுற என்றதனால், சேரற்கு எழுதியது வாழ்வாகிய செல்வத்தைக் கொடுக்கும்படிக்கென்றும் பொருள் கொள்ளக்கிடத்தலால் இங்கெழுதிய இத்திருமுகமே உயர்வென்னும் பொருள் தோன்றநின்றது.

குருபூசைத்திருநாட்காக முதனாளிலே அன்னக்கொடியேற்றின போது கூறியகவி.

செயநமசிவாயகுருவெனவருமம்பலவாணதேசிகன்று
னயமலிவிண்ணவர்வரினுநல்லமுதமாம்பதத்தைநல்குவோமென்
றியலுமன்னக்கொடிவானிலங்குறத்தம்பத்தின்மிசையேற்றினனவ்
வயனுயான்னக்கொடியுங்கண்டு பயங்கொளத்துறைசையதனின்மீதே

அமுதமாம்பதம்—அமுதத்துக்கொப்பாகிய அன்னம். அழிவில்லாததாகியபதவி.

இஃதோர்வருடத்திற்கூறியது.

நதிநதமுன்னுந்தீர்த்தம்படிந்துபலதலம் பணியுஞாலத்திரவ்
விதமெதற்குத்துறைசையினம்பலவாணசற்குவாம்விமலமூர்த்தி
பதமிலங்குகொடியேற்றிப்பதமுதவலானல்லபதமுட்கொள்வீ
ரதமுறுநும்பசிநோயும்பிறவியெனும்பெருநோயுமகலுந்தானே.

பதம்—அன்னம், பதவி, சமயம், நதம்—மேற்கு நோக்கிச் செல்லும் ஆறு.

குருபூசைத்தினத்திற் கொலுவீற்றிருந்தபோது கூறிய கவி.
குருபூசைதனிற்கொலுவீற்றிருந்தருளம்பலவாணகுருவைக்கண்டோர்
திருமானுன்முகன்மகவான்றினகரன்போலாமென்னச்செப்பினரியா [ம்
னுரைசெயினச்சணையுற்றான்மால்கொள்ளுமகன்வைரமுளனெஞ்ஞான்று
பரவல்பொருந்ாதவனென்றெப்பாகாமுறைபவர்க்குப்பகர்ந்திட்டேனே.

[மகவான்—இந்திரன். தினகரன்—சூரியன். நச்சணையுற்றான்—1. பாம்பணையுடையான் 2. நச்சுதல் பொருந்தியவன். நச்சுதல்—விரும்புதல். மால் கொள்ளுமகன்—1. திருமாலாற் கொள்ளப்பட்டமகன்.

2. மபக்கங்கொண்ட அகத்தையுடையான். வைரம்—1. வஜ்ராயுதம். 2. கோபம். பாவல்பொருந்தாதவன்—1. அடியர்களாலே தோத்திரஞ் செய்யப்படாதவன். பரவிய இருளைப்பொருந்தாதவன்.]

இஃதோர்வருடத்திற்கூறியது.

சேற்றிருந்தமரையுமலருறச்செய்யுந்திருமுகத்தாய்திருமேனிக்குக்
காற்றிருந்தமதன்றவவேடங்கொளினுஞ்சிறிதுநிகர்காணுதென்னக்
கூற்றிருந்தநகர்புகுதாதெற்கருளம்பலவாணகுருவேநீதான்
வீற்றிருந்தகொலுக்காணவிண்ணரசின்மிகக்கண்கள்வேண்டுந்தானே.

மரை—தாமரைமலர் அலருற—விரிதலுற, முகத்தையொவ்வாமை யாற் பழியுற

குருபூசைத்திருநாள் முடிந்தபின் பலவிததானங்கள்செய்ததைப் பற்றிக்கூறியகவி.

கன்னதானக்களிறூர்துறைசையினம்பலவாணகருணைமூர்த்தி
யன்னதானமுமதற்குபாதானதானமுமற்றதனுக்கேற்பச்
சொன்னதானமுமின்னுங்கோடிதானமுஞ்செய்தான்சொன்னுவல்லீ
ரின்னதானம்போலவெத்தானத்தெவர்செய்கின்றுரியம்புவீரே.

அதற்குபாதானம்—அவ்வன்னத்துக்கு முதற்காரணமாகிய அரிசி. சொன்னம்—பொன். கோடி—வஸ்திரம்.

மகரசங்கராந்தியிலே யெல்லாருக்குங்காட்சிகொடுத்திருந்தபோது கூறியகவி.

மருவுபுகழ்த்துறைசையினம்பலவாணகுருவைத்தைம்மதிமுன்னுளி
லருகுவந்துபணிசெய்பத்தவமுன்னருடைமையினலடியேன்போல்வார்
வருசிரத்தைத்தலையென்றுமுபருத்தமாங்கமென்றும்வளர்தேகத்தைத்
தருமூலகின்மெய்யென்றுந்தாவரமென்றும்புகலல்சாலுந்தானே.

தாவரம்—1. நிலையுள்ளது. 2. உடம்பு.

இஃதோர்வருடத்திற்கூறியகவி.

குருகையார்வாவிதிகழ்துறைசையினம்பலவாணகுருவையுள்ளந்
திருகையாயுழலாதன்புறமகரமதிமுதலாந்தினத்திலெவ்வை
வருகையாவணங்குகையாலவனருள்செல்வம்பெறுகைவாய்ந்தேவர்க்குந்
தருகையாமன்றிமன்னர்தம்பாலேற்றிடுகையாச்சாற்றுணுதே

குருகையார்—பறவைகளைப்பொருந்திய. திருகை—திருகுதல்—மாறு படுதல். வருகை—வருகின்றஒழுங்கு.

மஹாசன்னிதானம் தீபாவளித்தினத்திலே யெல்லாருக்குங்கோடி தானஞ்செய்த பெருமையைப்பற்றிக் கூறியகவி.

பெருகோடியருந்தியமானரகசதுர்த்தசிகண்டபெரியோனேனு
மொருகோடிபொன்னுடையாணுதலினு லுதவுகிலனுற்றூர்க்கென்றுந்
தருகோடிவள்ளலெனுஞ்சற்குருவம்பலவாணசாமிதானிங்
கிருகோடிகோடியெனவெத்தனையோகோடிதந்தானியம்பொணுதே.

பெருகு—தயிர். ஒருகோடிபொன்—1. ஒருபீதாம்பரம். 2. ஒருகோடி திரவியம். கோடிவள்ளல்—புதியவள்ளல். கோடி கோடி—கொள்வாய் கொள் வாய் ; (அடுக்கு).

இஃதோர்வருடத்திற்கூறியகவி.

முனமூன்றுவள்ளல்களுங்கோடிகொடுத்தாரெனயாமொழியக்கேளோ
மனேநிகரம்பலவாணகுருநரகசதுர்த்தசிநாளதனில்வந்தோர்
மனமகிழும்படிகோடிபலகோடியெனநன்குவழங்கினுே
வினையநாளிக்குருவேகோடிவள்ளலாமென்னவியம்புவோமே.

இஃதோர்வருடத்திற்கூறியகவி.

இருபொருள்சேர்குருமணியம்பலவாணவள்ளலனமிசைந்திருக்கத்
தருதலினுமயனுனேன்பொன்வாசமுதவலின்மாதவனுமானேன்
சிரமலியவிளங்கியவெண்கலையுதவலாலுமுருத்திரனுமானே
ஞெருநரகசதுர்த்தசிநாளதனிவினிப்பெறும்பேறென்னுலகின்மீதே.

அனமிசைந்திருக்க—1. அன்னவாகனத்திசைந்திருக்க. 2. அன் னத்தை யுண்டிருக்க, பொன்வாசம்—பீதாம்பரம். சிரம்—1. தலை 2. நெடுங்காலம். விளங்கிய வெண்கலை—1. பிரகாசிக்கின்ற வெள்ளிய சந்திரகலை 2. விளங்கிய வெள்ளைவஸ்திரம். எண்கலையென்று பிரித்து எண்ணத்தக்கநூலென்று கொள்ளனுமாம்.

இஃதோர்வருடத்திற்கூறியகவி·

கார்மலிசோலைத்துறைசைக்குருபணியம்பலவாணகருணைவள்ள
லோர்நரகசதுர்த்தசியிற்பொன்னுடைமுதற்பலவுமுற்றோர்க்கெல்லாம்

வாரியளித்தனன தனுற்றனக்கெனவொன்றையும்வேண்டாவரதனன்றிப்
பாரிலகுதிகம்பரனுமிக்குருவென்பதையறிந்தோம்பாவல்லீரே.

ஏறுமுகக்கண்டிகையருளியபோது கூறியகவி.

உலகினென்றும்வழியடியானென்பதனையேவருநன்குணர்வதற்கோ
குலவுமிகபரமேலாமின்பமுறும்படியுள்ளங்கொண்டுதானே
மலர்புகழம்பலவாணகுருமணிதன்னடையாளமாலையிட்டா
னிகலடிமைபணிபூண்டாலாண்டானுக்கழகிதென்பாரெனக்கொண்டேனே.

திருவடையாளமாலையென்பது உருத்திராக்கமாலைக்கொருபெயர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தாபகரும் பாலவனத்தஞ் சமீன்தாருமாகிய பாண்டித்துரைபேரிற்கூறிய நடுவெழுத்தலங்காரக்கவி.

கனமருவுசிவனார்பேரொன்றுசங்கின்பேர் நூல்
கருதுறுநெட்டெழுத்தின்பேரன்பின்பேர்கடம்ப
வனநகரப்பேர்மணஞ்செய்கையின்பெரோராறின்
மன்னுநடுவெழுத்தாறும்வளர்பெயராக்கொண்டா
யனையபெயர்முன்பின்சேரவைமுறையேகற்றோர்க்
ககற்றித்தன்குலத்துமுறுதகற்றிவிளைததுண்டு
நினைவிருத்தியப்பதிதாட்கிட்டறிந்துநீதி
நிகழ்த்தரசேநினையடைந்தோர்நிதிபதியாகுவரே.

சிவனார்பேரொன்று—கபாலி.
சங்கின்பேர்—வண்டு.
நெட்டெழுத்தின்பேர்—நெடில்
அன்பின்பேர்—பத்தி.
கடம்பவனநகரப்பேர்—மதுரை.
மணஞ்செய்கையின்பேர்—வரைகை.
இவற்றின்நடுவெழுத்துப்பாண்டித்துரை.

அனையபெயர்முன்பின்சேரவை
கலி—வறுமை.
வடு—குற்றம்.
நெல்—செந்நெல்.
பதி—சிவம்.
மரை—தாமரைமலர்
வகை—முறைமை, எனப்பொருள்கொள்க.

சேற்றூர்ச்சமஸ்தான வித்துவான் கந்தசாமிக்கவிராயர் இராமசாமிக்கவிராயரிருவரும், முகவூரில் ஓராலயஞ்செய்துசிவலிங்கத்தையும் விநாயகரையும் பிரதிட்டைசெய்ததைக்குறித்துக்கூறிய கவிகள்.

சீராருமுலகினிற்பற்பலநாட்டிற்சிறந்தனதென்றமிழ்நாடங்க
ணோராருஞ்செந்தமிழ்க்காகரமாகுமிஃதுயர்ந்ததென்றுதேவ
ராராருமறிவறியபரஞ்சோதிவழுதியாயரசுசெய்த
வாராரும்பொருநைதிகழ்பாண்டிநாட்டினின்முகவூர்மருங்கின்மாதோ.

மூவர்தமிழ்த்தேவாரமாவாரங்கொண்டுதினமொழிவோன்பூவிற்
பாவலருங்காவலருமொருநொடியில்வியப்படையப்பகர்வோன்குரு
காவனத்தில்வருமானைக்கரத்தில்வைத்தபெருமானைக்கவிஞர்சேறைத்
தேவனைநற்பாமாலைசெய்துளத்திலாமாலைத்தீர்த்தாளென்போன்.

இத்தகைபோனெவனெனிற்பல்காவியமுஞ்செயவலவென்னையன்முன்னோன்
சுத்தநிலைசேர்பழனிக்குமாரமுனிவரனையான்றுதிக்கவின்றோன்
மெத்துபுகழ்ச்சேறையரசனகவிஞர்குலதிலகமென்னவந்தோ
னுத்தமமாங்கந்தசாமிக்கவிஞனெனும்பெயர்பெற்றுயர்ந்தோனம்மா.

திருக்கோவிலொன்றுமிகுபொருள்கொடுத்தென்றந்தையாற்செய்தான்கண்ட
வருக்கோவியப்பதனைத்தருவதுகேட்டவர்க்குமதுவழங்குமெய்யன்
பருக்கோவிலாக்கருணைபுரிதேவைப்பதிட்டிக்கும்பான்மையுன்னி
யிருக்கோவியமெனவிருந்தறிவினர்கற்குந்துறைசையிருந்தமூர்த்தி.

ஆகியசுப்பிரமணியதேசிகன்பாலுரைத்தவன்றனறைந்தவாறே
யேகனாகியசிவலிங்கப்பெருமான்றனைப்பதிட்டையியற்றியன்னா
ளேகையுடன்றன்னிறைமையீந்துமுன்னர்வைத்ததுபோலொருகொம்பானும்
வாகையுறுசெந்தமிழ்ச்சுந்தரவிநாயகற்பதிட்டைவகுத்திட்டானே.

தருமபுரவாதீனத்திலாதியிலிருந்த ஞானசம்பந்ததேசிகர் தமது குருவாகிய கமலைஞானப்பிரகாசதேசிகர்பாற்கூறியகவி.

கனக்கும்பொதிக்குமெருதிற்குந்தன்னிச்சைகண்டதுண்டோ
வெனக்குமுடற்குமெனதிச்சையோவிணங்கார்புரத்தைச்
சினக்குங்கமலையுண்ஞானப்பிரகாசசிதம்பரவின்
றனக்கிச்சையெப்படியப்படியாகவுரைத்தருளே.

குமாரகுருபரசுவாமி காசியிலிருந்து மூன்றுமுறைவந்து தருமபுரவாதீனத்திலே தமது ஞானாசாரியராகிய மாசிலாமணிதேசிகர்பாற் காசிக்குச்செல்லாது இருக்க வேண்டினெனக்கூற அப்போது, அத் தேசிகர் கூறியகவி.

காட்டிருந்தாலுமலையிருந்தாலுங்கருதரிய
நாட்டிருந்தாலுநமக்கென்னகாணல்லதோர்கமலை
வீட்டிருந்தாண்டருண்ஞானப்பிரகாசன்விரைமலர்த்தாள்
கேட்டிருந்தாலும்பிறவாநெறிவந்துகிட்டிடுமே.

தருமபுரவாதீனத்துத் தம்பிரான்சாமிகளிலொருவராகிய சம்பந்த சாணுலயரென்பவர் மைசூர் அரசரைக்கண்டபோது அவ்வரசர் உங்களாதீனத்தி லடியார்களெல்லா மென்னசெய்துகொண்டிருப்பார்க ளெனக் கேட்க உடனேகூறியகவி.

ஆய்வார்பதிபசுபாசத்தினுண்மையையாய்ந்தறிந்து
காய்வார்பிரபஞ்சவாழ்க்கையெல்லாங்கல்விகேள்வியல்ல
லோய்வார்சிவானந்தவாரியுளேயொன்றிரண்டுமறத்
தோய்வார்கமலைபின்ஞானப்பிரகாசன்மெய்த்தொண்டர்களே.

ஓர் நவராத்திரித் திருநாளில் இராசா பாற்காசேதுபதியின்மீது பாண்டித்துரைதேவர் கூறியகவி.

ஈசனங்கணெனுமதன்கணையெய்திடானையெய்தினோர்க்
கிரவொழிந்திடுமதியுநின்குடையென்னவின்னொளிதுன்னுமால்
வீசுதென்றலுமுன்வரைப்படும்வேலையங்கடன்மேலைநாண்
மேவுநின்குலவீரனம்பினில்வேதையுற்றதுதூதெனு
வாசைநெஞ்சைவிடுக்கின்மீளவுமணுகுறுதுசுகத்தினே
டனமடைந்திலளூனவசஞ்செயலாவதொன்றையுமேவிலாள்
வாசமென்குழலாடியக்கிமயங்கிடாதுகலந்தருள்
வளமிகுந்திடுமுகவைடம்பதிமருவுபாற்காநிருபனே.

சே, ரா. சுப்பிரமணியக்கவிராயர்.